# திருப்புகழ் பாடல்களில் தேவியின் துதிகள். வர்ணனைகள். லீலைகள்

## திருப்புகழ் பாடல்களில் தேவியின் துதிகள், வர்ணனைகள், லீலைகள்


| | | | (பக்கம்) |
|---|---|---|---|
| திருப்புகழ் பாடல்கள் | ... ... ... | | ... 1 to 48 |
| துதிகள் | ... ... | (227) | ... 49 to 54 |
| மாலின் சகோதரி | ... ... | (14) | ... 54 |
| ஈசன் இடம் உறையும் தேவி | ... | (39) | ... 55 |
| வர்ணனைகள், லீலைகள் | ... | (395) | ... 56 to 66 |

| | பாடல் எண் | | | பாடல் | கருத்து |
|---|---|---|---|---|---|
| | தி.வ | செ. | ம | | |
| 1 | 458 | 526 | 384 | குமரி காளி (அமுத) | துதி. வர்ணனை |
| 2 | 24 | 23 | 40 | கமல மாதுடன் | குடிலை. யோகினி. சண்டினி. குண்டலி |
| 3 | 27 | 66 | 53 | கொம்பனையார் | எம் புதல்வா "வாழி வாழி" என்று வீரவேல் தந்த சங்கரி |
| 4 | 49 | 93 | 94 | மூளும் வினை சேர | காலன் விழ மோது சாமுண்டியின் துதி. வர்ணனை |
| 5 | 20 | 56 | 36 | ஏவினை நேர்விழி | ஆயி. பராபரை. தேன் மொழியாள் |
| 6 | — | 52 | 32 | இரு குழை எறிந்த | இமவரை தரும் கருங்குயில் |
| 7 | 85 | 101 | 179 | போதகம் தரு | கோல அம்பிகை விருப்பே சிறார்கும் ஆவினன்குடிப் பெருமாள் |
| 8 | 88 | 103 | 189 | மூல மந்திரம் | ஆலம் உண்டவர் பாகம் துன்றிய வாலை அந்தரி |
| 9 | 92 | 104 | 200 | வேயிசைந்தெழு | ஆதி அம்பிகை. வேத தந்திரி |
| 10 | 70 | 176 | 146 | குருதிமல சலம் | மலை அரையர் திருமகள், அரியின் இளையவள் |
| 11 | 82 | 183 | 174 | பஞ்ச பாதகன் பாவி | சந்தான சிவகாமி |
| 12 | — | 131-1 | 148 | குழல்கள் சரிய | விமலி, அமலி, நிமலி, விபின கௌமரி |
| 13 | — | 137 | 184 | முகிலனை கத்திற | பச்சைப் பசங்கி, அம்பண காதலி |
| 14 | — | 142 | 195 | வனிதையுடல் | மனகம் அணி மாதங்கி. பரம கலியாணி |
| 15 | — | 145 | 116 | இரவியென | அரவ பூஷணி. திரிபுவனி |
| 16 | — | 146 | 117 | இரு கனக மா மேரு | புரந்த கடவுளுடன் வாதாடு காளி |
| 17 | — | 177 | 147 | குழலடவி முகில் | பழனி, மலை வடு, பழ நிமலை |
| 18 | — | 194 | 198 | விதமிசைந்தினி | மவுன சுந்தரி, காரணி, யோகினி |
| 19 | — | 197 | 215 | கோமள வெற்பினை | இராஜத லக்ஷண. லக்ஷ்மி |
| 20 | 100 | 206 | 210 | கதிரவன் | உலகங்களைப் படைத்துக் காக்கும் பாவை |
| 21 | 96 | 210 | 206 | எந்தத் திகையி | மலைமகள். மரகத உமை |

| | பாடல் எண் | | | பாடல் | கருத்து |
|---|---|---|---|---|---|
| | தி.வ. | செ | ம | | |
| 22 | 109 | 220 | 223 | நாவேறு பா | கார் போலு மேனி பெற்ற காமாரி வாமி |
| 23 | – | 267 | 276 | தொடத்துளக்கி | படைத்து அளித்து அழிக்கும் பரத்தின் உச்சியில் நடநவில் உமை |
| 24 | – | 423 | 641 | சமரமுக வேலொத்த | ஒருதரிய காயத்ரி |
| 25 | – | 278 | 252 | ஓலையிட்ட குழை | நீலி. நிட்களி. நிர்க்குணி. அறக்கினி |
| 26 | – | 303 | 291 | முகத்தை மினுக்கி | தை பொருள் பயனுக்கு உரை அடுகிய சமைபவள் |
| 27 | 108 | 325 | 542 | எழுத நிறை நாபி | மும்மூர்த்திகளும் இறைவி |
| 28 | – | 304 | 292 | முகனு மிரவியு. | அகில புவனமும் உதவிய, புரம் நொடியினில் எரி செய்த அபிராமி |
| 29 | 172 | 337 | 555 | தவளரூப (மேனியுகம்) | ருத்ரி. நிரஞ்சனி. வேத விதக்ஷிணி |
| 30 | – | 360 | 578 | காமாத்திரமாகி | காலாக்கினி. கோப பயிரவி |
| 31 | – | 374 | 592 | நீலமஞ்சான | மோக சங்காரி தாய அம்பா |
| 32. | – | 656 | 652 | மங்கைக் கணவனு | தங்கப் பவள நனி. பால் மதி போல் முக பரமேசுரி |
| 33 | 299 | 686 | 682 | அணி செவ்வியார் | பணி கொன்னி. பர மெல்லியார். பரமேசுரி |
| 34 | – | 700 | 696 | நிரைதரு மணி | அகிலமும் அருள், அருள் ஏய்ந்த கோமளி |
| 35 | – | 701 | 697 | வருமயில் ஒத்தவர் | ஜக ரக்ஷணி. நீர் ஆவாரணி |
| 36 | 224 | 707 | 703 | ஆதிமுதனினில் | கோதை. கோமளி. அநாதி |
| 37 | 209 | 719 | 715 | தோலெலும்பு | வேத மந்த்ர ரூபி, சுந்த்ர சூடி. பஞ்ச பாணி |
| 38 | 276 | 751 | 747 | சதுரத்தரை | கூற்றினை மோதிய பத சத்தினி |
| 39 | 267 | 826 | 822 | பாலோ தேனோ பலவுரு | மலர் மகள், கலை மகள், ஒதார் சீராள் |
| 40 | 228 | 831 | 827 | புலவரை | சிந்தூர வாள் நுதல். இமய மகள் |
| 41 | – | 735 | 730 | கருமுகில் போல் | முத்தார் நகை அம்மை |
| 42 | 246 | 812 | 808 | பச்சை யொண் | இருநாழி நெலால் அறம் எப்போதும் பகிர்வாள் |

| | பாடல் எண் | | | பாடல் | கருத்து |
|---|---|---|---|---|---|
| | சி.வ. | செ. | ம. | | |
| 43 | 229 | 876 | 872 | மனமெனும் | செனனி, சங்கரி, ஆரணி, நாரணி |
| 44 | — | 725 | 721 | முகிலாமெனு | கமலாலய நாயகி, ஞான பராபரை |
| 45 | — | 732 | 727 | வேலிரண்டெனு | நாடகம் பயில் நாரணி, பூரணி |
| 46 | — | 746 | 741 | ஆரத்தனபார | வேதக் கொழுவாள், மூவர்க்கு முன்னோ |
| 47 | — | 748 | 744 | பலபல தத்துவ | அறச் சுக குமரி, தகப்பனை மழுகொடு வெட்டிய நிமலிகை |
| 48 | — | 760 | 756 | வாட்டியெனை | விறல் கூற்றுவனைக் காய்ந்த அபிராமி |
| 49 | — | 763 | 759 | பூத்தார் குருங் | படைத்தல், காத்தல், அழித்தல் - முத்தொழிலையும் செய்பவள் |
| 50 | — | 765 | 761 | சரம் வெற்றிக் | சிவகாவண மீதுறை சிவபத்திப் பரமேஸ்வரியாள் |
| 51 | 503 | 971 | 967 | முத்து நவரத்ந | த்ரிபுவனத்தி, நவ சித்தி அருள் சத்தி |
| 52 | — | 766 | 762 | மூல முண்டகனு | அம்பரி, குமாரி, சிவகாம சுந்தரி |
| 53 | — | 768 | 764 | அலைகடல் கிலே | சிவனுடன் நடம் வரு மங்கை |
| 54 | — | 787 | 783 | மூலாதார மோ | எமை ஆளும் தாயாள் |
| 55 | — | 810 | 806 | காதோடு தோடி | ஆகாச மேனி, அபிராமி |
| 56 | — | 854 | 850 | கிதசந்தன | வளரும் தழல் ஒளிர் சாம்பவி |
| 57 | — | 859 | 855 | தேனிருந்த கிதழார் | ஓம் நம அந்த சிவரூபி, அஞ்சு முக நீலி |
| 58 | — | 898 | 894 | நீரிழிவு குட்ட | நாடக நடத்தி, வேத நாயகி, ஞான பூரணி |
| 59 | 203 | 899 | 895 | கருகி அறிவகல | புரம் எரித்தது, கச்சியில் தவம் கியற்றியது |
| 60 | — | 920 | 916 | வாளின் முனையினு | லக்ஷ்மி, சரஸ்வதி, ரதி, அருந்ததி, கிந்த்ராணி ஆதியோர் வணங்கும் த்ரியம்பகி |
| 61 | — | 976 | 972 | கொந்தள ஓலை | ஞானச் சிவகாமி, கோலச் சுந்தரி |
| 62 | — | 943 | 939 | கிருகுழையிடறி | அரகர எனும் வித்தாரி, மாமனோ |
| 63 | 337 | 1136 | 1133 | கிரவொடும் பகலே | திரிபுரம் தழல் ஏவி, சார்வி, அபிராமி |

| | பாடல் எண் | | | பாடல் | கருத்து |
|---|---|---|---|---|---|
| | கி-ப. | செ. | ம | | |
| 64 | 331 | 1129 | 1126 | ஆராத காதலாதி | வாசா மனோசரா பராபரை. ஆதி லோக நாயகி |
| 65 | 330 | 1168-1 | 1169 | ஆரவாரமா | நாரி. வீரி. சூரி. அம்பை |
| 66 | 392 | 1163-1 | 1162 | ஞான விபூஷணி | ஞான விபூஷணி. மாமாயி. குமரி |
| 67 | 373 | 1007 | 1004 | தசையுமுதிரமு | அநகை. அநுபவை. அநுதயை. அபிநவை |
| 68 | 399 | 1176 | 1177 | புகரில் சேவல் | வேதமு நின்று மணம் கமழ் அபிராமி |
| 69 | 366 | 1240 | 1241 | சிவஞான புண்ட | உவகாரி. அன்பர் பணி கலியாணி |
| 70 | 385 | 1001 | 998 | நாலிரண்டிதழ | கால சங்கரி. சீலா சீலி. த்ரிகலி |
| 71 | — | 1276 | 1277 | வரி விழி பூச | சிவை, கயிலாச வாசி. மலைமகள் |
| 72 | 421 | 997 | 994 | வேத வித்தகா | வேத வித்தகி. வீமா. விராகிணி. சாமா தேவி |
| 73 | — | 1213 | 1214 | ஆசைநேசமகக்கி | ஏசிலாத மலைக் கொடி. மனோமணி. சற்குணி |
| 74 | 402 | 1263 | 1264 | பூத கலாதி | பிடாரி. வியஞ்சி. ஆலம் மெலாம் முக பஞ்ச வால் |
| 75 | — | 1133 | 1130 | இடம் மருவுங் | இருநாழிபடி கொடு அறம் காத்த மா பரைச்சி |
| 76 | — | 1049 | 1046 | அயிலின் வாளி | பரிபுர ஆர பாதார சரணி. சாமளா ஆதார பரம யோகினி. |
| 77 | 436 | 456 | 314 | புனமடந்தை | மூன்று எட்டு சக்ர தலப் பெண் |
| 78 | 427 | 457 | 315 | கறை கிலங்கு | ஈசன் சடையில் உள்ள யாவும் மணக்கும் சரணி |
| 79 | 428 | 460 | 318 | கனிதருங் | அறம் இரண்டு வட்டு. எட்டு எட்டும் வளர்க்கும் தலைவி |
| 80 | 432 | 464 | 322 | தலைவலயத்து | குறைவற முப்பத்திரண்டு அறம் புரிகின்ற சக்ர ப்ரசண்ட சங்கரி |
| 81 | — | 455 | 313 | தெரிவ வஞ் | பஞ்சுந் திரிசூலந் தரி அந்தரி. கரும்பு இக்குப் பத்தரை |
| 82 | — | 459 | 317 | அரியயன் புட்பி | கருதும் அன்பர்க்கு சித்தி அளிக்கும் கவுரியின் வர்ணனை |
| 83 | — | 482 | 340 | கலகலெனப் பொற | திரிபுவனத்தைக் கண்ட நாடகி |
| 84 | — | 463 | 321 | சலமலம் விட்டத் | கருதும் அவர்க்குப் பதங்கள் தந்தருள் கவுரி |

| | பாடல் எண் | | | பாடல் | கருத்து |
|---|---|---|---|---|---|
| | கி.வ | செ | ம | | |
| 85 | 442 | 501 | 359 | நூல மறைகள் | கால முதல்வி. நாத வடிவி. அகிலம் பரந்தவள் |
| 86 | 445 | 507 | 365 | பரிமள மிகவுள | கரிவனம் உறை அகிலாண்ட நாயகி |
| 87 | 457 | 511 | 369 | கருணை சிறிதுமில் | திரிபுர தகனி, கவுரி, பவதி, பகவதி, பயிரவி, சுலி |
| 88 | 464 | 567 | 426 | தமரகுரங்களு | பொன் பாவை, பச்சை, வஞ்சி, பூவை, சத்தி, அம்பை |
| 89 | – | 554 | 412 | காராடக் குழ | சிவ அநுபந்த உறை என்றன் மாதா, வேத ஆகமக் கலைபோள |
| 90 | – | 565 | 423 | சுக்கில் சுரோணி | மிகு சித்து அனைத்தையும் விழித்த சத்தி |
| 91 | 478 | 634 | 493 | எழு கடல் மணலை | விழு திகழ் அழகி, மரகத வடிவி, விமலி |
| 92 | – | 580 | 439 | மேக மொத்த குழ | ஆகமத்தி, சிவன் ஆகம் உற்ற சிவகாமி |
| 93 | – | 585 | 444 | விந்துப் புளகித | மழு உழை கரத்தி, முயலக பதத்தி |
| 94 | – | 601 | 460 | தத்தை யென | சிந்தாமணி, செங்குமரி, அங்கி விழி மங்கை |
| 95 | – | 608 | 467 | முக சந்திர புருவம் | அகரம் திகழ் அமுதம் பொழி பரை, அந்தரி |
| 96 | 477 | 626 | 485 | எறும்புத் தோல் | கிழப் பொற்காளை மேல் ஏறும் எம் நாயகி |
| 97 | 488 | 646 | 505 | நாடா பிறப்பு | கனத்த அரி தோல் ஆசனத்தி |
| 98 | – | 640 | 499 | சக சம்பக் குடை | அரன், அரி, அயன் அண்டர்க்கு அரியாள் |
| 99 | – | 647 | 506 | நாலு சதுரத்த | ஆணவ மயக்கமும் கல்வி, காமியம் அகற்றி எனை ஆள் உமை |
| 100 | – | 653 | 512 | மருவு கடல் முகி | செட்டிகத்த தத்துவ சித்திற சிறபதம் வைத்தக் கறபுறு கவுரி |
| 101 | – | 644 | 503 | தத்தை மயில் போது | சத்தி சுரஜோதி, வெகுரூபி, சுக நித்திய கல்யாணி |
| 102 | – | 648 | 507 | நீலக் குழலார் | அற்புத வேதச் சொரூபாள், மாணிக்கமினள், நிர்க்கள உமை |
| 103 | 495 | 439 | 1313 | ஆசை நாலு | என் மாசு சேர் எழு பிறப்பையும் அறுத்த உமை |
| 104 | – | 434 | 1308 | இலவிதழ் | குமரி, வராகி, மோகி, பகவதி, ஆதி, சோதி, பரம கல்யாணி, வேத ஞானி |
| 104A | 149 | 393 | | ஆதி மகமாயி. அம்மை | சிவனார் மகிழ்ந்த ஆ உடைய மாது |

| | எண் | பாடல் | கருத்து |
|---|---|---|---|
| 105 | சீர்பாத வகுப்பு (30) | யுவதி. பவதி... | விசையை, திரிபுரை. புநிதை. வநிதை, அபிநவை, அநகை |
| 106 | தே-சங்க வகுப்பு (1&2) | தரணியில் | துதி. வர்ணனை. லீலைகள் |
| 107 | திரு வேளை..வகுப்பு (13) | யாமளை, மணக்கு | யாமளை. மணக்கு முக சாமளை |
| 108 | வேடிச்சி கா... (1) | உதர கமலத | புவனத்ரயமும் யுக முடிவில் வைத்துக் காப்பாற்றும் உமையாள |
| 109 | கடைக்கணியல் (15) | மலை கிழை மடந்தை | மலை கிழை மடந்தை பெற்ற ஒரு மதலை |
| 110 | பூத வேதாள (1) | அருண கண | அசுர வதை ஜபத்தார் க்ரமத்திடு சக்ர தலத்தி |
| 111 | பொருகள..வகு (1) | அதிர்த்த பரிபுர | பரிபுர பதத்தி. பயிரவி |
| 112 | போர்க்கள... (2.29) | பிணமலை பவுரி | த்ரியம்பகி. திகம்பரி. நிர்ப்பாவகுண நிர்மலி |
| 113 | திருக்கையில்... | சிவத்த கமல | செகத்ரயம் முகிழ்த்த உதரத் திரிபுரை |
| 114 | வேல்வாங்கு (18-23) | வாம அங்கனை | அருபவை, அதுதிதை. அம்பை. அசாமபரை. அநகை. அசஞ்சலை |
| 115 | சிவயோக... (1,2) | பஞ்சாட்சரர். | தாளிணில் சகலமும் அடங்கி ஒடுங்கும் பார்ப்பதி |
| 116 | சித்து வகுப்பு (73) | மிடை தரும் | ஈசன் தலையில் உள்ள கொன்றை. பிறை. மணநாறு பாதார விந்தம் |
| 117 | வேல் விருத்தம் : 2 | வெங்காள கண்டர் | கங்காளி சாமுண்டி. வாராகி, இந்த்ராணி. கௌமாரி |
| 118 | மயில் விருத்தம் : 2 | சக்ர ப்ரசண்ட | ஈசனின் சடாமுடியில் கவுரியின் பத்மப் பதம் கமழ்வது |
| 119 | மயில் விருத்தம் . 5 | சோதியிம வேத | சிவகாமசுந்தரி பயந்த நிரை சேர் அண்ட பகிரண்டங்கள் |
| 120 | மயில் விருத்தம் : 7 | தீரப் பயோததி | அருமயில் நிகர் வல்லி, அபிராம வல்லி, பரமானந்த வல்லி |
| 121 | சேவல் விருத்தம் : காப்பு | கொந்தார | ஏழிசை மருளா. குதலை மொழிந்து அருள் கவுரி, சுதந்தரி |
| 122 | சேவல் விருத்தம் : 6 | பங்கமாகிய | மாலினி. கவுரி. மலை அரையன் உதவு அமலை |
| 123 | சேவல் விருத்தம் 10 | மகரசலநிதி | சுக விமலை. அமலை. பரை. அனதை அசலையாள் |
| 124 | சேவல் விருத்தம் - 11 | பூவில்லயன் | இராஜத இலக்கண உமை |
| 125 | அலங்காரம் - 80 | மாகத்தை முட்டி | த்ரிபுராந்தனை - த்ரியம்பகனை பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி |
| 126 | " - 5 | திருந்தப் புவன | திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை |
| 127 | " - 13 | ஒருவரைப் | ஒருவரைப் பங்கில் உடையாள் |
| 128 | " - 22 | மொய்தார் அணி | உமையாள் பயந்த இலஞ்சியம் |
| 129 | அந்தாதி - 78 | திரிபுரந் தப்பு | பூர நாளிற் பிறந்த லோக மாதா |
| 130 | " - காப்பு. 2 | உண்ணமுலை | அருணை வெற்பாள், ஒப்பில் உண்ணமுலை உமை |
| ... | ... | ... | ... |

① குமரி காளி (அமுதமூறு) (இவ:458. செ:526; 10:384) ①

குமரி காளி வராகி மகேசுரி
கவுரி, மோடி, சுராரி நிராபரி,
கொடிய சூலி, சுடாரணி யாமளி மகமாயி

குறளுருவ முராரி சகோதரி,
உலகதாரி. உதாரி. பராபரி.,
குருபராசி. விகாரி. நமோகரி, அபிராமி

சமரநீலி, புராரி தன் நாயகி,
மலைகுமாரி, கபாலி, நல்நாரணி
சலிலமாரி. சிவாய மநோகரி பரை யோகி

சவுரி, வீரி, முநீர் விட போஜனி.
திகிரி மேவு கையாளி, செயாள், தரு
சகல வேதமும் ஆயின தாய் உமை அருள்பாலா.

துதி. வர்ணனை ①

என்றும் இளமையாக இருப்பவள். கருநிறம் உடையவள். வராகியாக விளங்குபவள், பெரிய செல்வத்தை உடையவள் (சுராரி நிராபரி) தேவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களை முதன்மை இழக்கச் செய்பவள், (கவுரி) பொன் நிறம் படைத்தவள் (மோடி) பகைவர்க்கு அச்சத்தைத் தருபவள், (கொடிய சூலி) உக்ரமான சூலத்தை ஏந்தியவள் (சுடாரணி) ஒளி மயத்தவள். பச்சை நிறத்தவள். மகத்தான மாயம் புரிபவள்

வாமனரூபம் கொண்ட திருமாலின் சகோதரி. உலகங்களைத் தாங்கிக் காப்பவள், தயாள குணம் பூண்டவள். முதன்மை பூண்டவள். சிவனுக்குக் கண் போன்றவள். வேறுபாடுகளைப் பூண வல்லவள். வணங்கப்படுபவள், பேரழகுள்ளவள்

போரில் வல்ல துர்க்கை. திரிபுரத்தை எரித்தவருடைய பத்தினி. இமயமலையின் புதல்வி, கபாலம் ஏந்தியவள், நல்ல நாரணி. நீர் பொழியும் மழைத் தேவி. சிவ சம்பந்தப்பட்டு விரும்பத் தக்கவள். பராசக்தி. யோகி

(சௌரியம்) பராக்ரமம் உடையவள். வீரம் உள்ளவள். கடல் விஷத்தை உண்டவள். சக்கரம் ஏந்திய திருக்கரத்தை உடையவள். செம்மை நிறம் உடையவள். ஒப்பற்ற எல்லா வேதங்களுமாய் நிறைந்த அன்னை. உமை ஆகிய பார்வதி அருளிய குழந்தையே.

(2) கமல மாதுடன் (அ.வ: 24: செ-23: ம: 40)

குமரி காளி பயம் ஹரி, சங்கரி
கவுரி நீலி பரம்பரை அம்பிகை
குடிலை யோகினி சண்டிணி குண்டலி எமது ஆயி

குறைவு இலாள், உமை, மந்தரி, அந்தரி
வெகு வித ஆகம சுந்தரி தந்தருள்
குமர

(3) கொம்பனையார் (அ.வ. 27; செ: 66 : ம: 53)

பம்பரமே போல ஆடிய
சங்கரி, வேதாள நாயகி
பங்கய சீ பாத நூபுரி கரசூலி
பங்கம் இலா நீலி, மோடி, பயம் ஹரி
மாகாளி, யோகினி
பண்டு சூராபான சூரனொடு எதிர்போர் கண்டு
எம் புதல்வா வாழி வாழி
எனும் படி வீறான வேல்தர
என்றும் உளானே மனோகர வயலூரா

(2)

குடிலை, யோகினி, சண்டினி, குண்டலி (2)

என்றும் அகலாத இளம் பருவத்தையுடைய கன்னிப் பெண், கரிய நிறத்தை உடையவள், (அடியவர்) பயத்தை நீக்குபவள், ஆன்மாக்களுக்கு சுகத்தைச் செய்பவள். பொன்னிறத்தை உடையவள், நீல நிறத்தை உடையவள், (பரம்பரை) பெரிய பொருள்களுக்கெல்லாம் பெரிய பொருளாக வீற்றிருப்பவள், (அம்பிகை) உலக மாதா, (குடிலை) சுத்த மாயை, (யோகினி) யென்னும் தெய்வமாக இருப்பவள், (சண்டினி) பாவிகளுக்குக் கோபவுளைகத் திகழ்பவள், குண்டலி சக்தியாய் இருப்பவள், எங்கள்தாய்

குறைவில்லாதவள், உமை, (மந்தரி) சுவர்க்க லோகத்தை அருளுபவள், (அந்தரி) முடிவில்லாதவள், பல வகைப்பட்ட சிவாகமங்களால் துதிக்கப்படும் அழகியுமாகிய பார்வதி தேவி தந்தருளிய குமரனே.

எம் புதல்வா வாழி வாழி என்று வீறான வேல் தந்த சங்கரி

பம்பரத்தைப் போல சுழன்று ஆடிய சங்கரி, வேதாளங்களுக்குத்தலைவி தாமரை போன்ற பாதங்களிற் சிலம்பு அணிந்தவள், திருக்கரத்திற் சூலத்தை ஏந்தினவள்.

குற்றமில்லாத நீல நிறத்தவள், (மோடி) காடுகாள் துர்க்கை பயத்தைப் போக்குபவள், மகா காளி, யோகினி, முன்பு மதுபானம் செய்திருந்த சூரனொடு எதிர்த்து (நீ) போர் செய்ய வேண்டியதைக் குறித்து எமது குமாரனே வாழ்க, வாழ்க என்று வாழ்த்துமபடி, வெற்றியைத் தரும் வேலாயுதத்தைத் தரப்பெற்ற என்றும் அழியாதுள்ள மூர்த்தியே! மனத்துக்கு இன்பம் தருபவரே! வயலூர்ப் பெருமானே

(3)

(4) **மூளும் வினை சேர** (இ.வ.49; செ.93; ம:94)

காளவிடம் ஊணி, மாதங்கி, வேதஞ் சொல்
வேதை, நெடுநீலி, பாதங்களால் வந்த
காலன் வீழ மோது சாமுண்டி, பார் அம்மொடு
அனல் வாயு

காதி முதிர் வானமே தங்கி வாழ் வஞ்சி
ஆடல் விடை யேறி பாகம் குலா மங்கை
காளி நடமாடி நாள் அன்பர் தாம் வந்து தொழு மாது

வாளம் முழுதாளும் நேர் தண் துழாய் தங்கு
சோதி மணி மார்ப மாலின் பின்னை, இன்சொல்
வாழும் உமை மாதரார் மைந்தனே, எந்தை
இளையோனே

(5) **வினை நேர் விழி** (இ.வ.20; செ:56; ம:36)

தேவி மனைமணி, ஆயி, பராபரை
தேன் மொழியாள் தரு சிறியோனே

(6) **இருகுழை எறிந்த** (இ.வ: — ; செ: 52; ம: 32)

சங்கரர் களி கூரும் - இமவரை தரும் கருங் குயில், மரகத
நிறம் தருங் கிளி எனதுயிர் எனும் த்ரியம்பகி பெருவாழ்வே

(3)

**காலன் வீழ மோது சாமுண்டியின் துதி. வர்ணனை**

கரிய விடத்தை உண்டவள், (மதங்க முனிவருக்குப் புதல்வியாக அவதரித்த) மாதங்கி, வேதங்களால் புகழப்பட்ட வேதை, பெருமை வாய்ந்த நீலநிறம் உடையவள், திருவடிகளால், (மார்க்கண்டேயர் உயிரைப் பறிக்க) வந்த காலன் விழும்படி உதைத்து வீழ்த்திய துர்க்கை, நிலம், (அம்மொடு) நீருடன், நெருப்பு, காற்று (காதி - காந்தி) பேரொளி மிகுந்த ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களில் (அந்தர்யாமியாக) தங்கி வாழ்கின்ற வஞ்சிக்கொடி போன்றவள்
ஆடல் புரியவல்ல, விடையின் மேல் வரும் சிவபெருமானுடைய பாகத்தில் விளங்குகின்ற மங்கை, காளி, நடனி, நாள் தோறும் அன்பர்கள் வந்து தொழுகின்ற மாது
சக்ரவாளகிரியால் சூழப்பட்ட மூவுலகம் முழுமையும் காத்து ஆளும் ஒப்பற்ற குளிர்ந்த துளப மாலை தங்கும் மார்பனும், சோதி மணி யாகிய கவுத்துவமணி அணிந்த மார்பனும் ஆகிய திருமாலின் தங்கை, இன்சொல்லே வழங்கும் உமாதேவியாரின் மைந்தனே! எந்தையே! இளையோனே!

**ஆயி. பராபரை. தேன் மொழியாள்**

தனிமையானவரும், மனைத்திற்கு இசைந்த மணியும், அகில உலகங்கட்கு அன்னையும், பெரிய பொருளும், தேன் போன்ற இனிய மொழியை உடையவளும் ஆகிய பார்வதி அருளிய சிறியவனே.

**இமவரை தரும் கருங்குயில்**

சங்கரர் மகிழ்ச்சி மிகக் கொள்ளும், இமயமலை பெற்ற கரிய குயில், பச்சை நிறங் கொண்ட கிளி, எனது உயிர் என யான் போற்றும் முக்கண்ணி பெற்ற பெருவாழ்வே -

(7) போதகம் தரு (கி.வ: 85; செ: 101; ம: 179)

ஆதி சங்கரனார் பாக மாது உமை
கோல அம்பிகை மாதா மனோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டு விருவே சிராடவே ....
... ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமானே.

(8) மூல மந்திரம் (கி.வ: 88; செ: 103; ம: 189)

ஆலம் உண்டவர் சோதி அம் கணார்
பாகம் துன்றிய வால அந்தரி
ஆதி அந்தமுமான சங்கரி குமரேசா

(9) வேயிசைந்தெழு (கி.வ: 92; செ: 104; ம: 200)

ஆயி சுந்தரி நீலி பிங்கல
போக அந்தரி சூலி குண்டலி
ஆதி அம்பிகை வேத தந்திரி இடம் அரும
ஆலம் உண்ட அரனார்

(10) குருதி மல சலம் (கி.வ: 70; செ: 176; ம: 146)

பரிதி மதி கனல விழிய சிவனிடம்
மருவும் துங்க மலை அரையர் திருமகள்
படிவம் முகில் என அரியின் இளையவள் அருள்பாலா



கோல அம்பிகை விருவே சிராடும் ஆவினன்குடிப் பெருமாள

சிவபெருமானது பாகத்தில் விளங்கும் உமை. அழகிய அம்பிகை. மாதா. மனோன்மணி. ஆயி. சுந்தரி. உயிர்கட்கு தாயான நாரணி அழகி (ஆகிய பார்வதி தேவி)
அன்பு கொண்டு பெருமையுடனே (உன்னைச்) சீராட்ட
. . . திருவாவினன் குடியில் வாழ்வு கொண்டிருக்கும் தேவர்கள் பெருமானே.

ஆலம் உண்டவர் பாகம் துன்றிய வால அந்தரி

நஞ்சை உண்டவரும், முச்சுடர்களையும் முக்கண்களாக் கொண்டவருமான சிவ பெருமானது பாகத்தில் பொருந்திய குமரி, பராகாச வடிவி, ஆதியும் அந்தமுமாய் விளங்கும் சங்கரியின் குமரனும் ஈசனே.

ஆதி அம்பிகை. வேத தந்திரி.

தாய், அழகி, நீல நிறம் கொண்டவள், (பிங்கல) பொன்னிறம் படைத்தவள், போகத்தை ஊட்டும் பராகாச வடிவினள், திரிசூலத்தைத் தரித்தவள், சுத்த மாயையாம் சக்தி, ஆதி பராசக்தி, வேத நூற் பொருளானவள் ஆகிய பார்வதி தேவி. இடது பாகத்திலே அமரும், நஞ்சு உண்ட சிவபெருமான

மலை அரையர் திருமகள்; அரியின் இளையவள்

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் மூன்று கண்களாகக் கொண்ட சிவனுடைய இடது பாகத்தில் உன்னத, உயர்ந்த பர்வத ராஜனது அழகிய மகள், வடிவம் மேகம் போன்ற திருமாலின் தங்கை

(11) <u>பஞ்சபாதகன் பாவி</u> <u>(இவ: 82; செ: 183; ம: 174)</u>

மங்கை, மோக, சிங்கார ரகுராமரிட
தங்கை, சூலி, அம் காளி, எமை ஈண புகழ்
மங்கள ஆயி, சந்தான சிவகாமி அருள்பாலா

(12) <u>குழல்கள் சரிய</u> <u>(இ.வ: — , செ: 134-1 ; ம: 148)</u>

விமலி அமலி நிமலி குமரி கவுரி தருணி
விபின கெமனி அருள் பாலா

(13) <u>முகிலள கத்திற</u> <u>(இவ: — ; செ: 137 : ம: 184)</u>

செகம் முழுதும் ஒக்கப் பயந்த சங்கரி
அடியவர் சித்தத்து உறைந்த சம்ப்ரம
சிவன் ஒரு பக்கத்து உறைந்த மங்கை சு மங்கை, நீடு
திகழ்வன பச்சைப் பசங்கி, அம்பண
கரதலி, கச்சு உற்று இலங்கு கொங்கையள்
திருவருள் நற் பொற் பரத்திடும் பரை, அண்ட மீதே

பகல் இரவு அற்றிட்டு உயர்ந்த அம்பிகை
திரிபுரை, முற்றிட்டு இரண்டொடு ஒன்று அவர்
பரிவு உற ஒக்கச் செயும் பரம்பரமி அன்புகூரும்

பதிவ்ரதை, மிக்கச் சிரம் தெரித்தருள
பகிரதி பெற்பிற் பிறந்த பெண் தரு - - - - - தம்பிரானே



<u>சந்தான சிவகாமி</u>

மங்கை, வசீகரமும் அழகும் கொண்ட ரகுராமருடைய தங்கை சூலமேந்தினவள், அழகிய காளி. எம்மை ஈன்ற புகழ் நிறைந்த மங்களகரமான தாய், சந்தான விருக்ஷம் போல் வேண்டியதைத் தருகின்ற சிவகாமி. உமை அருளிய பாலனே.

<u>விமலி, அமலி, நிமலி, விபின கெமனி</u>

மலம் இல்லாதவள், மலத்தை அகற்றுபவள், பரிசுத்தமானவள், குமரி, கவுரி, இளமை உடையாள், (விபின கெமனி) மயானத்தில் ஆடுபவள் ஆதிய பார்வதி அருளிய குமரனே

<u>பச்சைப் பசங்கி, அம்பண கரதலி</u>

உலகம் முழுதும் ஒரு சேர ஈன்ற சங்கரி, அடியார்களுடைய உள்ளத்தில் உறைகின்ற சிறப்பு வாய்ந்துள்ள சிவபெருமானது ஒரு புறத்தே இடம் கொண்டுள்ள மங்கை, நல்ல மங்கை, பெரிதும் விளங்கும் அழகிய பச்சைப் பசேல் என்ற நிறம் உடையவள், அம்பணம் என்ற யாழ் ஏந்திய கரத்தினள், ரவிக்கை பொருந்தி விளங்கும் கொங்கை உடையவள். திருவருள் என்கிற நல்ல செல்வத்தைப் பரப்பிப் பாலிக்கும் பராசக்தி. அண்டங்களுக்கு அப்பால்

பகலும் இரவும் அற்றுப் போன உயர்ந்த இடத்தில் உள்ள அம்பிகை (திரிபுரை) மூன்று உலகங்கட்கும் தலைவி (மு) மும்மூர்த்திகளுக்கும் உயர்ந்தவள், பூரணரதி (உ-ம்) மூவரும் அல்லரான (அவர்களுக்கு மேம்பட்டவரான) சிவபிரான் அன்பு கொள்ளும்படி பொருந்தித் (தவம்) செய்த பரதேவதை. அன்பு மிக்க பதிவ்ரதை. சிறந்த (சிவனது) சிரசில் விளக்கமுற்றிருக்கும் கங்கா நதி உற்பத்தியாகும் இமயமலையில் உதித்த பெண்ணாகிய பார்வதி அருளிய - - -

(14) வனிதையுடல் (கி.வ: — ; செ: 142 ; ம: 115)

பனகம் அணி மா மதங்கி குமரி வெகு நீலி சண்டி
பரம கலியாணி தந்த பெருவாழ்வே

(15) இரவியென (கி.வ: — ; செ: 145 ; ம: 116)

நிருமலிய திரிநயனி, வான் வீசு வரு குமரி,
கவுரி, பயிரவி, அரவ பூணாரி, திரிபுவனி
நிபுட மலை அரசன் அருள் வாழ்வான பூரண உமை அருள்பாலா

(16) இருதனத மாமேரு (கி.வ: — ; செ: 146; ம: 117)

கருணை உமை மா தேவி காரணி அநந்த
சயன கனி கூர் அரி சோதரி, புரந்த
கடவுளுடன் ஆதாடு காளி, மலை மங்கை அருள்பாலா

(17) குழலடவி முகில் (கி.வ: — ; செ: 177; ம: 147)

பழனி, மலை வரு, பழநிமலை தரு
பழநிமலை முருக விசாகா

(18) விதுமிசைசுதினி (கி.வ: — : செ: 194 : ம: 198)

மதுர கின்சொலி மாது உமை நாரணி
கவுரி அம்பிகை யாமளை பார்வதி
மவுன சுந்தரி காரணி யோகினி சிறுவோனே



பனகம் அணி மாதங்கி- பரம கலியாணி

பாம்பணி பூண்ட சிறந்த மாதங்கி (மதங்க முநிவரின் புதல்வி) குமரி, மிக்க நீலி, துர்க்கை, பரம கல்யாணி தந்த பெருவாழ்வே.

அரவ பூணாரி, திரிபுவனி

நிர்மலி (மலமில்லாதவள்), முக்கண்ணி, (வான்) ஒளி வீசு எழுந்தருளும் குமரி, கவுரி, பயிரவி, பாம்பை ஆபரணமாகப் பூண்டுள்ள (நாரி) தேவி மூவுலகங்கட்கும் தலைவி, (நிபுட) நெருக்கமாயுள்ள சிகரங்களுடைய இமய மலை அரசன் வளர்த்தருளிய மகளாம் ஒளி நிறைந்த உமையாள்-

புரந்த கடவுளுடன் வாதாடு காளி

கருணை நிறைந்த உமை, மகா தேவி, எவைக்கும் காரணமானவள், ஆதிசேடன் மேல் துயில் மகிழ்ச்சியுடன் கொள்ளும் திருமாலின் சகோதரி. (புராந்தக) திரிபுரத்தை எரித்த கடவுளுடன் வாதாடிய காளி, இமய மலையின் குமாரி அருளிய பாலனே.

பழனி, மலை வரு, பழநிமலை

(பழனி) பழம் கனி போன்றவளும், இமயமலையில் அவதரித்தவளும், (பழ) பழைய, (நிமலி) நிர்மலி — மலமில்லாதவளாகிய பார்வதி அருளிய பழநி மலை முருகனே! விசாகனே!

மவுன சுந்தரி, காரணி, யோகினி

இனிமையான மொழிகள் உடையவள், உமை மாது, நாரணி, கவுரி, அம்பிகை, யாமளை, பார்வதி, மௌன சுந்தரி, எல்லாவற்றுக்கும் காரணி, யோகினி என்னும் திருநாமங்கள் வாய்ந்த தேவியின் குமரனே.

(19) <u>கோமள வெற்பினை</u> (இ.வ:— ; செ: 97 : ம: 215)

இராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் பெருமானே

(20) <u>கதிரவன்</u> (இ.வ: 100, செ: 206 ; ம: 210)

அடைவொடு உலகங்கள் யாவும் உதவி நிலை கண்ட பாவை
அருள் புதல்வ

(21) <u>எந்தத் திகையினு</u> (இ.வ: 96 ; செ: 210 ; ம: 206)

எந்தைக்கு உயிரெனும் மலைமகள், மரகத,
கந்தப் பரிமள தனகிரி உமை அருள் கின்யோனே

(22) <u>நாவேறு பா மணத்த</u> (இ.வ: 109 ; செ: 220 ; ம: 223)

கார் போலு மேனி பெற்ற மாகாளி, வாலை சத்தி
காமாரி வாமி பெற்ற பெருமானே.

(23) <u>தொடத்துளக்கிகள</u> (இ.வ:— ; செ: 267 ; ம: 276)

படைத்து அனைத்தையும் வினையுற நடனெரு
துடைத்த புத்தினி, மரகத சொருபி, 3ர
பரத்தின் உச்சியின் நட நவில் உமை அருள்கின்யோனே.

(24) <u>சமரமுக வேலொத்த</u> (இ.வ:— ; செ: 423 ; ம: 641)

இமகிரி குமாரத்தி, அநுபவை பராசத்தி
எழுதரிய காயத்ரி உமையாள குமரோனே



<u>இராஜத லக்ஷண லக்ஷ்மி</u>

ராஜத லக்ஷணம் நிறைந்தவளாயுள்ள உமை பெற்றருளிய பெருமானே.

<u>உலகங்களைப் படைத்துக் காக்கும் பாவை</u>

முறையாக உலகங்கள் எல்லாவற்றையும் படைத்து, அவைகளை நிலைத்திருக்கக் காத்த உமா தேவி அருளிய புதல்வனே.

<u>மலைமகள் மரகத உமை</u>

என் தந்தையாம் சிவபெருமானுக்கு உயிர் போன்ற மலைமகள், பச்சை நிறத்தி. மிகுந்த வாசனை தங்கிய கொங்கை மலைகளை உடையவள் ஆகிய உமாதேவி

<u>கார் போலு மேனி பெற்ற காமாரி வாமி</u>

கரிய மேகம் போன்ற மேனியை உடைய பெருமை வாய்ந்த காளி, பாலப் பருவத்தினள், சத்தி. காமனை எரித்த சிவனது இடது பாகத்தில் இருப்பவள் பெற்ற பெருமானே. —

<u>படைத்து அளித்து அழிக்கும் பரத்தின் உச்சியில நடநவில் உமை</u>

படைத்து அனைத்தையும், செயறபடச் செய்து காப்பாற்றி, நடராசப் பெருமானுடன் இருந்து அவைகளை அழித்த கற்புடையாள், மரகத வடிவி, 3ப்பற்ற பரவெளிக்கு மேலே நடனம் புரிகின்ற உமாதேவி. . .

<u>எழுதரிய காயத்ரி</u>

இமயமலையின் குமாரி, இன்ப நுகர்ச்சிகளை ஊட்டுபவள், பேராற்றலுடையவள், எழுதுதற்கரிய காயத்ரி மந்த்ர சொருபி, உமையவள் குமரனே.

(25) ஓலையிட்ட குழை (கி.வ:— ; செ: 278; ம: 252) (8)

நீலி, நிட்களி, நிர்க்குணி, நித்தில
வாரி முத்து நகைக் கொடி, சித்திர
நீல ரத்தினம் இட்ட அறக்கிளி புதல்வோனே.

(26) முகத்தை மினுக்கி (கி.வ:— ; செ: 303; ம: 291)

புகை தழுவக்கொடு, திரிபுரம் எரிபட
நகைத்தவருக்கு இடம் உறைபவள், வலைமகள்,
பொருப்பில் இமக்கிரி பதிபெறும் இமையவள், அபிராமி.
பொது உற்று, திமித்திமி நடமிடு பகிரதி,
எழுத்து அறி ருத்திரி, பகவதி, கவுரி, கை
பொருள் பயனுக்கு உரை அடுகிய சமைபவள், அமுது ஆக
. . .

செகத்தை யகத்து இடு நெடியவர் கடையவள்
அறத்தை வளர்த்திடு பரசிவை குலவதி
திறத் தமிழைத் தரு பழையவள் அருளிய சிறியோனே

(27) எழுகு நிறை (கி.வ: 108; செ: 325; ம: 542)

எழுத் நிறை நாபி அரி. பிரமர், சோதி
இலகும் அரன் மூவர் முதல்வரேனோர்
இறைவி எனும் ஆதி பரை



கருநிறம் கொண்டவள், மாசு அற்றவள், குணங்கடந்தவள்,
முத்துக்களுள் கடல் முத்தைப் போன்ற பற்களையுடைய கொடி
போன்றவள், அழகிய நீல ரத்தின (அணிகலைக் - அணிகலன்கள்)
கொண்ட அறம் வளர்த்த நாயகி - கிளியன்ன பார்வதி - - -

கை பொருள் பயனுக்கு உரை அடுகிய சமைபவள்

புகைதரும் நெருப்பினால் திரிபுரம் எரிபட்டு அழியச் சிரித்தவருடைய
இடது பாகத்தில் வீற்றிருப்பவள், வலைஞர் (பரதவர்) மகளாகத் தோன்றி
னவள், மலைகளுள் இமயமலைக்கரசன் பெற்ற இமயவல்லி, அபிராமி
அம்பலத்தில் அமைந்து, திமித்திமி என்று நடனம் செய்யும் தேவி.
எழுத்து இலக்கணங்கள் அறிந்துள்ள ருத்திரி. (பகவதி) ஆறு குணங்
களை உடையவள், பொன்னிறம் படைத்தவள், ஒழுங்காகப் பொருளின்
பயனைச் சொல்லுக்குப் பொருந்தி இருப்பவள் (சொல்லும் பொருளும்
போலச் சிவத்தொடு கலந்து நிற்பவள்) அமுதம் போல
பூமியை வயிற்றில் அடக்கிய நெடியோனாம் திருமாலுக்குத் தங்கை
(காஞ்சியில் முப்பத்திரண்டு) அறங்களை வளர்த்த பரசிவை, சிறப்
பமைந்தவள், ஆற்றலுடைய தமிழைத் தந்த பழையவளாகிய
உமை அருளிய சிறியோனே.

மும்மூர்த்திகளுக்கும் தலைவி

ஏழுலகங்களையும் தமது நாபியிடம் கொண்ட திருமால், பிரமர்,
சோதி வடிவமாக விளங்கும் உருத்திரன், இவர் மூவர் முதலான பிற
தேவர்கள் இவர்கள் யாவருக்கும். தலைவி எனப்படும் ஆதி பராசக்தி

(28) <u>முகிலுமிரவிய</u> (கி.உ:— ; செ: 304; ம: 292)

அகில புவனமும் அடைவினில் உதவிய
இமய கிரி மயில், குல வரை தநு என
அதிகை வரு. புரம் நொடியினில் எரி செய்த அபிராமி

(29) <u>தவளரூப (குவளை பூசல்)</u> (கி.உ: 172; செ. 337: ம. 555)

தவளரூப சரச்சுதி, இந்திரை,
ரதி, புலோமசை க்ருத்திகை. ரம்பையர்
சமுக சேவித துர்க்கை பயங்கரி புவநேசை
சகல காரணி, சத்தி, பரம்பரி,
இமய பார்வதி, ருத்ரி, நிரஞ்சனி
சமய நாயகி, நிஷ்களி, குண்டலி எமது ஆயி

சிவை மநோமணி சிற்சுக சுந்தரி
கவுரி, வேத விதக்ஷிணி, அம்பிகை
த்ரிபுரை, யாமளை, அற்பொடு தந்தருள் முருகோனே

(30) <u>காமாத்திரமாகி</u> (இவ:— செ: 360; ம: 578)

சீமாட்டியும் ஆய திரிபுரை காலாக்கினி கோப பயிரவி
சீல உத்தமி நீலி, சுர திரிபுவனேசை
சீராட்டோடு பேண- - விராலிமலை உறை பெருமானே



## <u>அகில புவனமும் உதவியது; திரிபுரம் எரி செய்தது</u>

சகல புவனங்களையும், முறைப்படி தந்த இமயமலை மயிலாம் (உமை) திரேட்டமான மலையாம் மேருவை வில்லாகக் கொண்டு, திருவதிகை என்னும் பதியில் திரிபுரத்தை ஒரு நொடியில் எரித்த அபிராமி

## <u>ருத்ரி, நிரஞ்சனி, வேத விதக்ஷிணி</u>

வெண்ணிறங்கொண்ட சரசுவதி, இலக்குமி, இரதி, இந்திராணி, கார்த்திகை மாதர்கள், அரம்பையர்கள் ஆகிய கூட்டத்தினர்கள் வணங்குகின்ற துர்க்கா தேவி, தீயவர்க்கு அச்சத்தைத் தருபவள், புவனங்களுக்கு தலைவி
சகல காரியங்கட்கும் காரணமாயிருப்பவள், ஆற்றலாகத் திகழ்பவள்,
முழு முதலாம் தேவி, இமயராசன் மகளாம் பார்வதி, ருத்ரி, அழுக்கற்றவள், சமயங்களுக்குத் தலைவி, உருவமில்லாதவள், குண்டலம் அணிந்தவள் (அவ்) சிவனது பரிக்கிரக (அங்கீகாரம், பற்றுகை) ரூபையான கிரியா சக்தி, எங்கள் தாய்
சிவன் தேவி, மனத்தை ஞான நிலைக்கு எழுப்புபவள், அறிவுரூப ஆனந்த அழகி, பொன்னிறமுடையவள், வேதத்திற் சிறப்பாக எடுத்து ஓதப்பட்டவள், அம்பிகை, இடை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளிலும் இருப்பவள், சியாமள நிறம் படைத்தவள், ஆகிய பார்வதி அன்புடன் பெற்றருளிய முருகனே.

## <u>காலாக்கினி, கோப பயிரவி</u>

பெருமாட்டியாகிய மூன்று உலகங்கட்கும் தலைவி, யுகாந்த கால நெருப்புப் போன்ற கோபம் கொள்ளும் பயிரவி, நல்லொழுக்கமுள்ள உத்தமி, நீலி, விண் ஆகிய மும்புவனங்களுக்கும் தலைவி - - -

(31) நீல மஞ்சான (கி.அ:— ; செ:374 ; ம: 592)

துவி. எம் தாய், கவுரி, மோக சங்காரி, குழை
தோடு கொண்டு ஆடு சிவகாம சுந்தாரி, நல
தூள் அணிந்து ஆளி, திருவாணி, அம்காளி, கலை
தோகை, செந்தாமரையின் மாது. நின்றே துதி செய்
தூய அம்பா, கழை கொள் தோளி, பங்காள கருணை
தோய் பரன் சேய் எனவுமே பெரும் பார் புகழும் விந்தையோனே

(32) மங்கைக் கணவனு (கி.வ:— ; செ:656 : ம:652)

கங்கைச் சடை முடியோன் இடம் மேவிய
தங்கப் பவள ஒளி பால்மதி போல் முக,
கங்குற் நிரி குழலாள் பரமேசுரி) அருள்பாலா

(33) அணி செவ்வியார (கி.வ:299 : செ:686 : ம:682)

பணி கொள்ளி, மா கண பூதமொடு,
அமர் கள்ளி, கானக நாடக
பரமெல்லியார் பரமேசுரி) தரு கோவே
மணம் 3ல்லியாகி நகாகன
தனவல்லி, மோகனமோடு அமர்
மகிழ் தில்லை மா நடம் ஆடினார் அருள்பாலா



துவத்தை ஏந்தினவள், எனது தாய், கவுரி, ஆசையை அறுப்பவள்
குழையும் தோடும் பூண்டு நடனஞ் செய்கின்ற சிவகாம சுந்தரி. நல்ல
விபூதி அணிந்து ஆள்பவள், திகம்பரி, அழகிய காளி, கலைமகள் சரசுவதியும்
செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியும் - ஆக இருவரும் நின்று
துதிக்கின்ற பரிசுத்தமான அன்னை, (கழை) மூங்கில் போன்ற
தோளை உடையவள் ஆகிய பார்வதியை (பங்காள) பங்கில் உடைய
வராய், (கருணை) திருவருள் நிறைந்தவராய் உள்ள பரமசிவனது
குழந்தை என்றே பெரிய உலகத்தோர் புகழும் விசித்திரமுடையவரே

தங்கப் பவள ஒளி பால் மதி போல் முக பரமேசுரி

கங்கையைச் சடையில் தரித்துள்ள சிவபெருமானது இடது பாகத்தில்
பொருந்தியவளாய்த் தங்கம், பவளம் இவற்றின் ஒளியும் கொண்ட
வளாய், பால் நிறத்து வெண்மதி போலத் திருமுகம் கொண்டவளாய்
இருள் கொண்ட கூந்தல் உடைய பரமேசுரி அருளிய குழந்தையே

பணி கொள்ளி பர மெல்லியார் பரமேசுரி

பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவள். பெரிய கணங்களான பூதங்க
ளொடு அமர்ந்துள்ள கள்ளி (திருடி), காட்டில் (சிவனுடன்) நடனம்
ஆடுகின்ற மேன்மையும், மென்மையும் உடையவள், பரமேசுரி - - -
திருமணம் விரைவிற் செய்து கொண்டு (கன தன நக வல்லி)
பருத்த தனங்களை உடைய (நக வல்லி) மலைக் கொடியாம்
பார்வதி. வசீகரத்துடன் அமர்ந்து மகிழும், தில்லையில் பெரிய
நடனத்தை ஆடி அருளினவர் அருளிய குழந்தையே -

(34) திரை தரு மணி (இவ: — ; செ: 700 ; ம: 696)

பரை. அபிநவை, சிவை, சாம்பவி, உமை.
அகிலமும் அருள். அருள் ஏய்ந்த கோமளி,
பயிரவி. திரிபுரை, ஆய்ந்த நூல் மறை சதகோடி

பகவதி, இரு சுடர் ஏந்து காரணி
மலைமகள், கவுரி, விதார்ந்த மோகினி
படர் சடை அவன் இடம் நீங்குறுதவள் தரு கோவே

(35) வருமயில் ஏத்தவா (இ.வ: — ; செ: 701 ; ம: 697)

நாரணி, உமையவள் உத்தர பூர்வா காரணி,
உறு ஜக ரக்ஷணி, நீர் ஆவாரணி தரு சேயே

—

(36) ஆதிமுதனினில் (இவ: 224 ; செ: 707 ; ம: 703)

கோதை, மலை வாழுகின்ற நாதர் இட பாக நின்ற
கோமளி அநாதி தந்த குமரேசா.



அகிலமும் அருள்; அருள் ஏய்ந்த கோமளி

பராசக்தி. புதுமையுடையவள் (அல்) சிவத்தினின்றும் பிரிவு படாதவள், சம்புவுடன் கூடியவள். உமை. எல்லா உலகங்களையும் – யாவற்றையும் அருளின, அருள் கொண்ட அழகி, பைரவராம் சிவனது பத்தினி (அல்) அச்சம் தருபவள். மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், (சதகோடி) நூறு கோடிக் கணக்கான நூல்களும் உபதேச ரகசியப் பொருள்களும் ஆய்ந்துள்ள பகவதி (அறுகுணங்களை உடையவள்). சூரியன், சந்திரன் என்னும் இரு சுடர்களும் (மத்தியில்) தரிக்கின்ற மூல தேவதை, இமயமலையின் புத்திரி. கவுரி. விதம் பல கொண்ட – பல உருவினளான – அழகி படர்ந்த சடையுடைய சிவனது இடது பாகத்தில் நீங்காது விளங்கும் தேவி பார்வதி பெற்ற தலைவனே.

ஜக ரக்ஷணி, நீர் ஆவாரணி

நாரணி (குளிர்ச்சி உடையவள்), உமையவள், வடக்கு கிழக்கு முதலிய திசைகளின் மூல தேவதை. உலகத்துக்கு உற்ற காத்தற் கடவுள், (ஆவரணம்: மறைப்புச் சக்தி: நீர்: நீர்மை: குணம்) மறைக்கின்ற சக்திக் குணம் (திரோதான சக்தி) உடைய அம்பிகை ஈன்ற குழந்தையே. [ஆன்மாக்களுக்குச் சிவசக்தி பக்குவம் வரும் வரை, மறைப்புச் சக்தியாக நின்று உதவுவள். அதற்குத் திரோதான சக்தி என்று பேர்.

கோதை, கோமளி, அநாதி

தேவி, கயிலை மலையில் வாழ்கின்ற சிவபெருமானது இடது பாகத்தில் இடம் கொண்டிருக்கும் அழகி, ஆதியில்லாதவள் தந்த குமரேசனே

(37) கோவலூர்ம்பு (இ: 209; செ: 719; ம: 715)

வால சந்த்ர சூடி. சந்த வேத மந்த்ர ரூபி. அம்பை
வாணி, பஞ்ச பாணி தந்த முருகோனே.

(38) சதுரத்தரை (இ: 276; செ: 751; ம: 747)

சிவ பத்தினி, கூற்றினை மோதிய
பத சத்தினி. மூத்த. விநாயகி.
செகம் இப்படி தோற்றிய பார்வதி அருள்பாலா

(39) பாலோ தேனோ பலவுறு (இ: 267; செ: 826; ம: 822)

தூவாள், மாவாள், மலர்மகள் கலைமகள்
ஓது ஆர் சீராள், கதிர்மதி குவவிய
தோடாள், கோடார் இணைமுலை கௌரி, முன் அருள்பாலா

(40) புலவரை (இ: 228; செ: 831; ம: 827)

வில் நுதல் மைக்கண் சிந்தூர வாள் நுதல்
இமய மகட்கு சந்தானமாகிய முருகோனே

(41) கரு முகில் போல் (இ: —; செ: 735; ம: 730)

அரி திருமால் சக்ராயுதனவன் இளையாள் முத்தார் நகை
அழகுடையாள், மெய் பால் உமை அருள்பாலா



இளம் பிறையைச் சூடியுள்ளவள், சப்த சுரங்களுடன் கூடிய வேத மந்திரத்தின் வடிவினையுடையவள், அம்பிகை. கலைமகளை ஒரு கூறாக உடையவள். ஐந்து மலர்ப்பாணங்களைப் படையாகக் கொண்டவள் ஆகிய உமா தேவியார் தந்தருளிய முருகோனே

கூற்றினை மோதிய பத சத்தினி

சிவனது பத்தினி, யமனை உதைத்த பாதங்களைக் கொண்ட சக்தி வாய்ந்தவள் (பராசக்தி), யாவர்க்கும் மூத்தவள். தடைகளை நீக்குபவள் (அல்) தனக்கு மேல் தலைமையில்லாதவள், அண்டங்களை இவ்வாறு சிருஷ்டித்தவளும் ஆகிய பார்வதி தேவி அருளிய பாலகனே!

மலர் மகள். கலைமகள். ஓதார் சீராள்

தூக்கை, திருமாலுக்கு உரியவளாம் மலர்மகள் லக்ஷ்மி. சரஸ்வதி இவர்கள் ஓதி நிற்கும் சீர் படைத்தவள். ஒளி வீசும் நிலவின் ஒளி கொண்ட தோடு என்னும் அணியை அணிந்தவள் (அல்) சூரியனையும் சந்திரனையும் தோடாகத் (குழை) கொண்டவள், மலை போன்ற கொங்கை இரண்டை உடைய தேவி. முன்பு அருளோடு அளித்த...

சிந்தூர வாள் நுதல் இமய மகள்

வில்லைப் போன்ற புருவத்தையும், மை பூசிய கண்களையும், சிந்தூரம் அணிந்த ஒளி வீசும் நெற்றியையும் உடைய இமயமலைப் புத்திரியாகிய பார்வதிக்கு மைந்தனாக வந்த முருகனே!

முத்தார் நகை அம்மை

ஹரி. திருமால், சக்ராயுதத்தை உடையவன், எனப்படும் பெருமானுக்குத் தங்கை, முத்தார்நகை அம்மை எனும் பெயருடைய அழகி. (சிவனுடைய) உடலில் (பால்) ஒரு பாகத்தில் உள்ள உமா தேவி - - .

(42) பச்சை யொண் (திரு:246; செ:812; 10:808) (13)

பச்சை நண் கிரி போல் இரு மாதன(ம்)
உற்(று) இதம் பொறி சேர் குழல் . வாள் அயில்
பற்று புண்டரிகாம் என ஏய் கயல் விழி . ஞான

பத்தி வெண் தரளாம் என வாள் நகை ,
வித்ருமம், சிலை போல் நுதலாரிதழ்
பத்ம செண்பகமாம் அநுபூதியின் அழகாள் என்று

இச்சை அந்தரி, பார்வதி மோகினி
தத்தை பொன் கவின் ஆலிலை போல் வயிறு
இற்பசுங்கிளியான மின் நூல் இடை அபிராமி

எக்குலம் குடியோடு உலகு யாவையும்
இற் பதிந்து இரு நாழி நெலால் அறம்
எப்போதும் பகிர்வாள் குமரா என உருகேனோ

(43) மனமெனும் பொருள் (திரு: 229; செ: 876; 10: 872)

செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி எண்குண பூரணி காரணி
சிவை பரம்பரை ஆகிய பார்வதி அருள் பாலா

இரு நாழி நெலால் அறம் எப்போதும் பகிர்வாள் (13)

பச்சை நிறமுள்ளதும், ஒளி உள்ளதும், மலை போன்ற இரண்டு பெரிய தனங்களைக் கொண்டு, இன்பம் அனுபவிக்கும் வண்டுகள் சேர்கின்ற கூந்தலையும், (வாள்) ஒளி கொண்ட வேல் போன்றதும், தாமரையின் தன்மையது என்று சொல்லத் தக்கதும், கயல் மீன் போன்றதுமான கண்களையும், ஞான ஒளி வரிசையில் உள்ள வெள்ளை முத்துக்கள் போன்ற ஒளி வீசும் பற்களையும் (சிலை போல் நுதல்) வில்லுக்கு ஒப்பான நெற்றியையும் (வித்ருமம், பத்மம், செண்பகம் போல் இதழ்) பவளம், தாமரை, செண்பகம் இவைகளுக்கு ஒப்பான இதழையும் உடைய, ஞான அருட்பிரகாச அழகி எனப்படுபவள் இச்சையெல்லாம் பூர்த்தி செய்யும் பராகாச வடிவி. பார்வதி. பேரழகி (தத்தை) கிளி, பொன்னின் அழகு வாய்ந்த ஆலிலை போன்ற வயிற்றினள் இல்லறம் நடத்தும் பைங்கிளி போல்பவள். மின்னலும் நூலும் போன்ற இடை உடைய அழகி

எல்லாக் குலத்தாருக்கும், எல்லா உடலுக்கும், உலகங்கள் யாவைக்கும் இருந்த இடத்தில் இருந்தே, இரண்டு படி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் எப்போதும் பங்கிட்டு அளிப்பவளா ஆகிய பார்வதி குமரனே என்று கூறி உள்ளம் உருக மாட்டேனோ!

செனனி, சங்கரி, ஆரணி, நாரணி

(உலகங்களின்) தோற்றத்திற்கு ஆதாரமானவள், சங்கரி, வேத முதல்வி நாராயணி, குற்றமற்றவள், எண்குணங்களும் நிறைந்தவள், எல்லாவற்றிற்கும் காரணமானவள், சிவை, பராபரை ஆகிய பார்வதி அருளிய பாலனே.

(42) பச்சையொண் (திரு:246; செ:812; ம:808) 

பச்சை நண் கிரி போல் இரு மாதன(ம்)
உற்(று) இதம் பொறி சேர் குழல் . வாள் அயில்
பற்று புண்டரிகாம் என ஏய் கயல் விழி. ஞான

பத்தி வெண் தரளாம் என வாள் நகை,
வித்ருமம், சிலை போல் நுதலாரிதழ்
பத்ம செண்பகமாம் அநுபூதியின் அழகாள் என்று

இச்சை அந்தரி, பார்வதி மோகினி
தத்தை பொன் கவின் ஆலிலை போல் வயிறு
இற்பசுங்கிளியான மின் நூல் இடை அபிராமி

எக்குலம் குடிலோடு உலகி யாவையும்
இற்பதிந்து இரு நாழி நெலால் அறம் —
எப்போதும் பகிர்பவள் குமரா என உருகேனே

(43) மனமெனும் பொருள் (திரு:229; செ:876; ம:872)

ஜெனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி எண்குண பூரணி காரணி
சிவை பரம்பரை ஆகிய பார்வதி அருள் பாலா

## இரு நாழி நெலால் அறம் எப்போதும் பகிர்வாள் 

பச்சை நிறமுள்ளதும், ஒளி உள்ளதும், மலை போன்ற இரண்டு பெரிய தனங்களைக் கொண்டு, இன்பம் அனுபவிக்கும் வண்டுகள் சேர்கின்ற கூந்தலையும், (வாள்) ஒளி கொண்ட வேல் போன்றதும், தாமரையின் தன்மையது என்று சொல்லத் தக்கதும், கயல் மீன் போன்றதுமான கண்களையும், ஞான ஒளி வரிசையில் உள்ள வெள்ளை முத்துக்கள் போன்ற ஒளி வீசும் பற்களையும் (சிலை போல் நுதல்) வில்லுக்கு ஒப்பான நெற்றியையும் (வித்ருமம், பத்மம், செண்பகம் போல் இதழ்) பவளம், தாமரை, செண்பகம் இவைகளுக்கு ஒப்பான இதழையும் உடைய, ஞான அருட்ப்ரகாச அழகி எனப்படுபவள் இச்சையெல்லாம் பூர்த்தி செய்யும் பராகாச வடிவி, பார்வதி, பேரழகி (தத்தை) கிளி, பொன்னின் அழகு வாய்ந்த ஆலிலை போன்ற வயிற்றினள் இல்லறம் நடத்தும் பைங்கிளி போல்பவள். மின்னலும் நூலும் போன்ற இடை உடைய அழகி

எல்லாக் குலத்தாருக்கும், எல்லா உடலுக்கும், உலகங்கள் யாவற்றுக்கும் இருந்த இடத்தில் இருந்தே, இரண்டு படி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் எப்போதும் பங்கிட்டு அளிப்பவள் ஆகிய பார்வதி குமரனே என்று கூறி உள்ளம் உருக மாட்டேனே!

## ஜெனனி, சங்கரி, ஆரணி, நாரணி

(உலகங்களின்) தோற்றத்திற்கு ஆதாரமானவள், சங்கரி, வேத முதல்வி நாராயணி, குற்றமற்றவள், எண்குணங்களும் நிறைந்தவள், எல்லாவற்றிற்கும் காரணமானவள், சிவை, பராபரை ஆகிய பார்வதி அருளிய பாலனே.

(44) முகிலாமெனு (தி.வ: — ; செ: 725 ; ம: 721)

கமலாலய நாயகி வானவர்
தொழும் ஈசுரனர் இடம் மேவிய
கருணைகர ஞான பராபரை அருள் பாலா

(45) வேலிரண்டெனு (தி.வ: — ; செ: 732 ; ம: 727)

நீல சுந்தரி, கோமளி, யாமளி
நாடகம் பயில் நாரணி பூரணி
நீடு பஞ்சமி சூலினி மாலினி உமை காளி
நேயர் பங்கெழு மாதவியாள், சிவ
காமசுந்தரியே தரு பாலக

(46) ஆரத்தன பார (தி.வ: — ; செ: 746 ; ம: 741)

பூரித்தன பாரச்சடை வேதக்குழலாள் பத்தர்கள்
பூசைக்கியல்வாள், பத்தினி சிவகாமி
பூமிக் கடல், மூவர்க்கு முனாள், பத்திரகாளிப், புணர்
போகர்க்கு உபதேசித்து அருள் குருநாதா

(47) பலபலதத்துவ (தி.வ: — ; செ: 748 ; ம: 744)

மலைசிலை பற்றிய கடவுள் இடத்து உறை
கிழவி, அறச் சுககுமரி, தகப்பனை
மழுகொடு வெட்டிய நிமலிகை பெற்றருள் முருகோனே



கமலாலய நாயகி, ஞானபராபரை

தாமரையில் கோயில் கொண்டிருக்கும் நாயகி, தேவர்கள் தொழு
கின்ற ஈசனுடைய இடது பாகத்தில் உள்ளவள், கருணைக்கு
இருப்பிடமானவள், ஞானபரதேவதை ஆகிய பார்வதி - - -.

நாடகம் பயில் நாரணி, பூரணி

நீலநிற அழகி, (கோமளி) இளமை வாய்ந்தவள், பச்சை நிறத்தை
உடையவள், கூத்துக்கள் பல பயிலும் நாரணி, நிறைந்தவள்,
சிறந்த பஞ்சமி- ஐந்தாவது சக்தியாகிய அநுக்ரக சக்தி, திரிசூலத்தை
தரித்தவள், (மாலினி) மாலையை அணிந்தவள், உமை, காளி)
அன்பர்கள் பக்கம் விளங்கி உதவும் (மாதவி) குருக்கத்திக்கொடி
போன்றவள்) தாக்ஷை. சிவகாம சுந்தரி தந்த குழந்தையே.

வேதக்குழலாள், மூவர்க்கு முனாள்

(பூரி) நிறைந்துள்ள தன பாரத்தையும், சடையையும் கொண்டுள்ள
வேத சொரூபக கூந்தல் உடையவள், பக்தர்களின் பூஜையை ஏற்றுக்
கொள்பவள், பத்தினி, சிவகாமி
பூமி, கடல், மும்மூர்த்திகள் ஆகிய எல்லாவற்றுக்கும் முன்னவள்,
பத்திரகாளி - ஆகிய பார்வதி அணைந்து சேரும், இன்ப அனுபவம்
உடைய சிவபெருமானுக்கு உபதேசித்து அருளின குருநாதனே.

அறச்சுககுமரி, தகப்பனை மழுகொடு வெட்டிய நிமலிகை

மேருமலையை வில்லாகப் பிடித்த சிவனது இடப்பாகத்தில் இருக்கின்ற
(கிழவி) உரிமை வாய்ந்தவள், தருமமே புரியும் சுககுமாரி, பிதாவாகிய
தக்கனை மழுக்கொண்டு வெட்டுவித்த நின்மலி பெற்றருளிய முருகனே

(48) வாட்டியென் (இ.வ: — ; செ: 760; ம: 756)

.. விடை ஏறி இடமும் கொள் ஆயி
கோட்டு முலை தாங்கும் இழையான இடை, கோடி மதி
தோற்றம் னைப் போந்த அழகான சிவகாமி, விறல்
கூற்றுவனைக் காய்ந்த அபிராமி மனதார அருள் கந்தவேளே.

(49) பூத்தார் குருங் (இ.வ: — ; செ: 763 ; ம: 759)

ஆத்தாள். மால். தங்கைச்சி. கன்னிகை. உமை.
கூத்தாடு ஆனந்தச் சிவை திரிபுரை
ஆட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவநேசை
ஆக்கா, யாவும் பற்றியெ, திரிபு உற
நோக்கா, தெஞ் செற்றவள் திருவிளை
யாட்டா ஈசன் பக்கமது உறைபவள் பெறு சேயே.

(50) சரம் விற்றிக (இ.வ: — ; செ: 765 : ம: 761)

பிறை வாழ் சடையான் இடம் உரு மாது
புகழ் சத்திச் சிவகா வண மீதுறை
சிவ பத்திப் பரமேஸ்வரியாள், திரி
புவனத்தைப் பரிவாய் முதல் ஈனுமை அருள்பாலா

(51) முத்து நவரத்ந (இ.வ: 503; செ: 971; ம: 967)

அம் அத்தனுடன் ஒத்த நடநி த்ரிபுவனத்தி நவ
சித்தி அருள் சத்தி அருணபுரி பாலா



## விறல் கூற்றுவனைக் காய்ந்த அபிராமி

இடப வாகனத்தில் ஏறின சிவபெருமானது இடது பாகம் கொண்ட தாய் மலையன்ன தனங்களைத் தாங்கும் நூல் போன்ற இடையையும், கோடி சந்திரர்களுடைய தோற்றம் கொண்டு வந்தது போன்ற அழகையும் கொண்ட சிவகாமி. வலிமை கொண்ட யமனை உதைத்து அழித்த அபிராமி, மனங்குளிர அருளிய கந்தவேளே.

## படைத்தல், காத்தல், அழித்தல் - முத்தொழிலையும் செய்பவள்

தாய், திருமாலின் தங்கை, கன்னிகை, உமை. நடனம் செய்யும் ஆனந்த சிவாம்பிகை, திரிபுரை, தான் ஆளும் பேய்களும் பூதங்களும், சுற்றியுள்ள பயிரவி. புவனங்களுக்கு ஈசுவரி
(யாவும் ஆக்கா பற்றியெ) எல்லாவற்றையும், ஆக்கியும் (பற்றியும்) கொண்டு காத்தும். வேறுபாடு பொருந்தப் பார்த்தும் எதையும் (செற்றவள்) அழித்தவள் — (படைத்தல், காத்தல். அழித்தல் - முத்தொழிலையும் செய்பவள்) திருவிளையாடலாக ஈசனது இடது பாகத்தில் வீற்றிருப்பவள் ஆகிய பார்வதி பெற்ற குழந்தையே.

## சிவகா வண மீதுறை சிவபத்திப் பரமேஸ்வரியாள்

நிலா வாழும் சடையரின் இடது பாகத்தில் உள்ள ஒப்பற்ற மாது எல்லாராலும் புகழப்படுகின்ற பராசக்தி, நிலை குலையாத மனப்பான்மையை மேற்கொண்டுள்ள சிவபக்தி நிறைந்த பரமேஸ்வரியாள் மூவுலகையும் அருளுடனே முன்பு படைத்தவளான உமாதேவி அருளிய...

## த்ரிபுவனத்தி நவ சித்தி அருள் சத்தி

நடனமாடும் பெரியோன் சிவனுடன் சமானமாக நடனம் புரிபவள், மூன்று லோகங்களுக்கும் முதல்வி - தலைவி - புதுமையான - அற்புதமான சித்திகளை அருள்பவள் ஆகிய பராசக்தி ஈன்றெடுத்த குழந்தையே.

(52) <u>மூலமுண்டகனு</u> (இ.வ: — ; செ: 766 ; ம: 762)

சூலி, அந்தரி, குமாரி, சங்கரி
புராரி, அம்பரி, குமாரி, எண்குண
சுவாமி பங்கி, சிவகாம சுந்தரி உகந்த சேயே

(53) <u>அலைகடல் சிலை</u> (இ.வ: — ; செ: 768 : ம: 764)

சிலை நுதல், கயல் விழி, செச்சொல் வானவி
திரிபுரை, பயிரவி, திங்கள் சூடிய
திகழ் சடை நெடியவள், செம்பொன் மேனியள் சிங்கமேறி

திரள் படை அலகைகள், பொங்கு கோடுகள்,
திமிலையொடு அறை பறை நின்று மோதிட
சிவனுடனே நடம் வரு மங்கை மாது உமை தந்த வேளே.

(54) <u>மூலாதார மொ</u> (இ.வ: — ; செ: 787 : ம: 783)

சூலம் மாது (உ)மை சார்ந்த சம்பவி
மாதா ரா பகல் காத்து அமைந்த அ(ன்)னை
சுடோடு ஈர் வினை வாட்டி, மைந்தர் என ஏமை ஆளும்

தாயாள் - - - சங்கரர்
தோய் சாரூபரொடு ஏற்று இருந்தவள் அருள் பாலா



<u>அம்பரி, குமாரி, சிவகாம சுந்தரி</u>

சூலாயுதத்தை ஏந்தியவள், பராகாச வடிவை உடையவள், கபாலம் ஏந்தியவள், சுகத்தைச் செய்பவள், திரிபுரங்களை எரித்தவள், சிதாகாச - ஞான வெளியில் உறைபவள், என்றும் இளையவள், எண் குணத்தவரான சிவபெருமான் பங்கில் உறைபவள், சிவத்தை உகந்த கட்டழகுடையவள் ஆகிய பார்வதி விரும்புகின்ற குழந்தையே

<u>சிவனுடன் நடம் வரு மங்கை</u>

வில்லைப் போன்ற நெற்றி, கயல்மீன் போன்ற கண், செம்மை வாய்ந்த சொல் - இவைதமை உடைய (வானவி) தேவி, மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், பயிரவி, சந்திரனைச் சூடிய விளக்கமுற்ற சடையை உடைய பெரியவள், செம்பொன் மேனியள், சிங்க வாகனம் கொண்டவள்
கூட்டமான படையாகப் பேய்களை உடையவள். ஒலி பொங்கி மேலெழும் (கோடுகள்) ஊது கொம்புகள், திமிலை, ஒலிக்கின்ற பறை, இவையெலாம் இருந்து பேரொலி (மோதிட) எழுப்ப, சிவனுடனே நடம் செய்யும் மங்கை. மாது. உமை தந்த வேளே.

<u>வர்ணனை: ஏமை ஆளும் தாயாள்</u>

சூலம் ஏந்தினவள், மாது, உமை, அருள் பொழியும் சாம்பவி - சம்புவின் மனைவி, சக்தி மாதா - தாய், இரவும் பகலும் உயிர்களைக் காத்து அமைந்த அன்னை. சுடுதலோடு நம்மை ஈர்த்து இழுத்துச் செல்கின்ற வினைகளைத் (வாட்டி) தொலைத்து, குழந்தைகளைக் காப்பது போல் நம்மை காத்து ஆளுகின்ற
பரிசுத்த தேவி - - - சிவபெருமான், (சாரூப.. தோய்) உருவத் திருமேனி கொண்டவர் ஆகிய பெருமானோடு பொருந்தி இருப்பவளாம் பார்வதி அளிய குழந்தையே.

(17)

(55) காதோடு தோடி (கி.வ:—; செ:810; ம:806)

மாதா, புராரி, சுக வாரி, பரை, நாரி, உமை
ஆகாச ரூபி அபிராமி வலம் மேவு சிவன்- . .

(56) திதத்தத்தன (கி.வ:— ; செ:854; ம:850)

மழுவும், கலை, பாணி
இடம் அன்பொடு வளரும் சிவை, புகழ் சுந்தரி, ஆதி,
வளரும் தழல் ஒளிர் சம்பவி, பரை, விண்டு இளை தோகை
தந்த சேயே

(57) தேனிருந்த இதழார். (கி.வ:— ; செ:859; ம:855)

ஓநமந்த சிவரூபி அஞ்சுமுக
நீலி, கண்டி கலியாணி விந்து ஒளி
ஓசை தங்கும் அபிராமி அம்பிகை பயந்த வேளே.

(58) நீரிழிவு குட்ட (கி.வ:— ; செ:898: ம:894)

நாரணி, அறத்தி நாரி, ஆறு சமயத்தி, பூத
நாயகர் இடத்து காமி மகமாயி

நாடக நடத்தி, கோல நீல வருணத்தி, வேத
நாயகி, உமைச்சி, நீலி திரிசூலி

வார் அணி முலைச்சி, ஞான பூரணி, கலைச்சி, நாக
வாணுதல் அளித்த வீர மயிலோனே

(17)

ஆகாச ரூபி, அபிராமி

மாதா, திரிபுரத்தை எரித்தவன், சுகக் கடல், பரதேவதை, பெண்,
உமை, ஆகாச சொரூபி, அழகி ஆகிய பார்வதியின் வலப்பால் உள்ள- .

வர்ணனை: வளரும் தழல் ஒளிர் சாம்பவி.

மழுவையும் மானையும் கையிற் கொண்டவர் ஆகிய சிவனது,
இடது பாகத்தில் அன்புடன் இருந்து விளங்கும் சிவை, புகழ்பெறும் அழகி,
ஆதி தேவதை, வளர்ந்தோங்கும் நெருப்புப் போலச் சிவந்து விளங்கும்
சாம்பவி, பராசக்தி, (விண்டு) திருமாலின் இளையவள்- தங்கை,
மயிலனையாள் தந்த சேயே.

வர்ணனை: ஓம் நம அந்த சிவரூபி, அஞ்சுமுக நீலி

ஓம் நம (சிவாய) என்னும் அந்த சிவத்துடன் கலந்த உருவத்தினள்,
அஞ்சு திருமுகங்களைக் கொண்ட நீலி, ரத்னமாலை அணிந்துள்ள
கல்யாணி, (விந்து) சிவஞான சக்தி, ஒளி, ஓசை இவைகட்கு ஆதார-
மாம் அபிராமி, அம்பிகை ஆன உமை பெற்ற செவ்வேளே.

நாடக நடத்தி, வேத நாயகி, ஞான பூரணி

நாரணி, (32) அறங்களைப் புரிந்த தேவி, ஆறு சமயங்களையும் காத்து
வளர்ப்பவள், பூதகணங்களுக்குத் தலைவரான சிவபெருமானது இடது
பாகத்தில் விரும்பி இருப்பவள், மகமாயி

திருவிளையாடல்களை இயற்றுபவள், அழகிய நீல நிறம் உடையவள், வேத
தலைவி, உமையம்மை, (நீலி) மூலாதாரத்தில் கரிய நிறத்தோடும் 'காகினி' என்னும்
திருநாமத்தோடும் உள்ளவள், முத்தலைச் சூலத்தைக் கொண்டவள்; ரவிக்கை அணிந்த
தனங்களை உடையவள், ஞானம் பூரணமாகக் கொண்டவள், கலைகளுக்குத் தலைவி,
(நாகம்) மலை (மகளாம்) ஒள்ளிய நெற்றியைக் கொண்ட தேவி அளித்த- . .

(59) கருகி அறிவகல் (இவ: 203 ; செ: 899 : ம: 895)

பொரு இல் மலை அரையன் அருள் பச்சைச் சித்ர மயில்
புரம் எரிய. இரணிய தனுக் கைப்பற்றி (இ)யல்
புதிய முக(கு) அரிய தவமுற்றுக் கச்சியினில் உறமேவும்
புகழ் வனிதை தரு புதல்வ

புரம் எரித்தது; கச்சியில் தவம் இயற்றியது 

தனக்கு நிகர் இல்லாத பர்வத ராஜன் பெற்ற பச்சை அழகு மயில்.
திரிபுரம் எரிய (மேருவாம்) பொன் வில்லைக் கைப்பற்றினவள்
(இயல்) உழுவலன்புடன் (புதிய) அதிசயமான வகையில்
ஊக்கத்துடன் அருமையான தவத்தை மேற்கொண்டு காஞ்சிப்
பதியிற் பொருந்தி விளங்கும்
புகழ் பெற்ற தேவி பார்வதி அருளிய புதல்வனே

(60) வாளின் முனையினு (இவ: — ; செ: 920 ; ம: 916)

காளி. திரிபுரை. அந்தரி. சுந்தரி
நீலி. கவுரி. பயங்கரி. சங்கரி
காருணிய சிவை குண்டலி சண்டிகை த்ரிபுராரி

காதல் மனைவி. பரம்பரை. அம்பிகை.
ஆதிமலைமகள், மங்கலை. பிங்கலை
கான நடனம் உகந்தவள், செந்திரு. அயன் மாது
வேளின் ரதி. அருந்ததி. இந்திர
தேவி. முதல்வர் வணங்கு த்ரியம்பகி.
மேக வடிவர் பின் வந்தவள் தந்தருள் இளையோனே

லக்ஷ்மி. சரஸ்வதி, ரதி. அருந்ததி, இந்த்ராணி முதல்வர் வணங்கு த்ரியம்பகி

காளி, மூன்று உலகங்களுக்கும் தலைவி. ஆகாச வடிவை உடையவள்,
அழகி. நீல(கரிய) நிறத்தை உடையவள் (சாகினி), பொன்னிறத்தவள், பயத்தை
தருபவள் - பயத்தைப் போக்குபவள், சங்கரி. கருணை நிறைந்த சிவாம்பிகை,
சுத்த மாயையாம் சக்தி. துர்க்கை. த்ரிபுரத்தை எரித்த தேவதை
விருப்பமுள்ள மனைவி. முழு முதல் தேவி, அம்பிகை. முதல்வி, பர்வத
ராஜகுமாரி, என்றும் சுமங்கலியா யிருப்பவள். தங்க நிறம் உடையவள்
மயானத்தில் நடனம் செய்வதில் பிரியம் கொண்டவள், இலக்குமி. சரஸ்வதி
மன்மதன் மனைவி ரதி. (வசிட்டரின் மனைவி) அருந்ததி. இந்திராணி
முதலியவர்கள் வணங்கும் முக்கண்ணி. மேக நிறம் கொண்ட திருமாலின்
தங்கை ஆகிய பார்வதி அருளிய இளையோனே.

(61) கொந்தள ஓலை குலு (இவ: — ; செ: 976 : ம: 972)

ஞானச் சிவகாமி. தொண்டர்கள் அகமம் அமர்ந்தவள் நீலச்
சங்கரி. மோக சவுந்தரி. கோலச்
சுந்தரி, காளி, பயன்தருள் ஆனைக்கு இளையோனே

ஞானச் சிவகாமி, கோலச் சுந்தரி)

ஞானவல்லியாம் சிவகாமி. அடியார்களுடைய உடலிடத்தே இடங்கொண்டு
அமர்ந்தவள், நீல நிறச் சங்கரி. மோக அழகி. அழகிய சுந்தரி. காளி)
பெற்றெடுத்த கணபதிக்கு இளையவனே.

(62) <u>இருகுழை யிடறிக்</u> (இ.வ: – ; செ:943 : ம:939)

முரண் முடி இரணச் சூலி, மாலினி,
சரண் எனும் அவர் பற்றுன சாதகி,
முடுகிய கடினத் தாளி வாகினி மது பானம்

பருகினர் பரமப் போக மோகினி,
அரகர எனும் வித்தாரி, யாமளி,
பரிபுர சரணக் காளி, கூளிகள் நடமாடும்

பறை அறை சுடலைக் கோயில் நாயகி
இறையொடு இடமிட்டாடு காரணி
பயிரவி அருள் பட்டாலியூர் வரு பெருமானே.

---

(63) <u>இரவொடும் பகலே</u> (இ.வ: 337; செ: 1136 : ம: 1133)

திருநடம்புரி தாளி, தூளி
மகர குண்டலி மாரி சூரி
திரிபுரம் தழல் ஏவி, சார்வி அபிராமி

சிவன் இடம் தரி நீலி சூலி
கவுரி பஞ்சமி ஆயி மாயி
சிவை பெண் அம்பிகை. வாலா, சீலா அருள்பாலா



<u>அரகர எனும் வித்தாரி, யாமளி</u>

வலிமை வாய்ந்த முடியை உடைய போர்க்கு உற்ற சூலாயுதத்தை ஏந்தினவள், மாலையை அணிந்தவள், (அல்) அரைங்களின் தெய்வமாக இருப்பவள், நீயே சரணம்- தஞ்சம் என நிற்கும் அடியார்களுக்குப் பற்றுக இருக்கும் குணத்தினள், வேகமாகச் செல்லும் கடினமான (தாளி) பனையன்ன கால்களை உடைய பேய்ப் படையை உடையவள் (அல்) கடினத்து ஆளி வாகினி- கடிய யாளி வாகனம்- சிங்க வாகனம் உடையவள், மதுபானம் பருகுபவர்களுக்கு (வாம தந்திரப்படி) உபாசிப்பவர்களுக்கு, போகத்தை அளிக்கும் அழகி, அரகர என்று விஸ்தாரமாக- நிரம்ப ஒலி செய்பவள், சியாமள நிறத்தை உடையவள், சிலம்பணிந்த கால்களை உடைய காளி, பேய்கள் நடிக்கின்றதும்
பறைகள் ஒலிப்பதுமான சுடுகாட்டுக் கோயிலில் இருக்கும் தேவி, பரம சிவனொடும் இடம் கண்டு நடனம் செய்யும் காரணமாக நடிப்பவள், பயிரவி ஆகிய தேவி அருளிய . . .

<u>திரிபுரம் தழல் ஏவி, சார்வி, அபிராமி</u>

திருநடனம் புரிகின்ற திருவடிகளை உடையவள், (தூளி) திருநீற்றுத்தூளை அணிந்துள்ளவள், மகர மீன் குண்டலங்கள் அணிந்துள்ளவள், (மாரி) துர்க்கை (சூரி) மாகாளி, திரிபுரங்களில் நெருப்பை ஏவினவள். புகலிடமாயுள்ளவள், அழகி
சிவனது இடது பாகத்தில் தரித்து இருப்பவள், நீல நிறத்தவள், சூலம் ஏந்தியவள், கௌரி, ஐந்தாவது சக்தியாகிய அநுக்கிரக சக்தி, தாய், மகமாயி, சிவை, அம்பிகை, மாதா, பாலாம்பிகை, (சீலா) பரிசுத்த தேவதை – . . .

(64) ஆராத காதலாகி (இ.வ:331; செ:1129; ம:1126) (28)

வாராகி, நீள் கபாலி, மாலினி
மாமாயி, ஆயி, தேவி, யாமளை
வாசா மகோசரா, பராயணை இங்குள் ஆயி

வாதாடி, மோடி, காடு காள், உமை
மாஞால லீலி, ஆல போசனி
மாகாளி, சூலி, வால, யோகினி அம்பவானி

சூராரி, மா புராரி, கோமளை
தூளாய பூதி பூசு நாரணி
சேரசைல, ஆதி லோக நாயகி தந்த வாழ்வே

(65) அரவாரமாயிருந்து (இ.வ.330; செ:1168-1, ம.1169)

நாரி, வீரி, சூரி, அம்பை, வேத வேதமே புகழ்ந்த
நாதர் பாலிலே இருந்த மகமாயி

நாடி ஓடி வார அன்பர் காண வேணதே புகழ்ந்து
நாளு நாளுமே புகன்ற வரை மாது
நீரின் மீதிலே இருந்த நீலி, சூலி வாழ்வு மைந்த
நீப மாலையே புனைந்த குமரேசா

வாசா மகோசரா பராயணை, ஆதி லோக நாயகி (20)

வாராகி, பெரிய கபாலத்தை ஏந்தினவள், மாலையை அணிந்தவள், பெரிய மாயையைச் செய்பவள், உலகங்கட்கு அன்னையாகத் திகழ்பவள், (தேவி) ஒளிமயமானவள், பச்சை நிறமுடையவள், வாக்குக்கு எட்டாதவள், பெரிய பொருளாகியவள், (உள் இங்கு ஆயி) உன்னத்திலே இங்கு தங்குகின்ற தாய்

(இறைவனுடன் காளியாய்) வாதாடினவள், (மோடி) துர்க்கை, வனதேவதை, உமை, பெரிய பூமியிலே (ஆக்கியும், அளித்தும், அழித்தும்) லீலைகள் புரிபவள், ஆலகால விஷத்தை உண்டவள், மஹா காளி, சூலாயுதத்தை ஏந்தியவள், பாலாம்பிகை, யோக சக்தியாக விளங்குபவள், அழகிய பவானி

மகிடா சூரனுக்கு (அரி) பகையானவள், பெரிய திரிபுரத்தை எரித்தவள், அழகி. திருநீறாகிய விபூதியைப் பூசும் நாரணி, திருவண்ணாமலையில் ஆதி லோக நாயகி, ஆகிய பார்வதி அளித்த செல்வமே.

நாரி, வீரி, சூரி, அம்பை

தேவி, வீரமுள்ளவள் (சூரி) அச்சத்தைத் தருபவள், மாகாளி அம்பிகை எல்லா வேதங்களும் புகழ்கின்ற தலைவராம் சிவபெருமானிடத்தே இருக்கும் தேவி பார்வதி
தன்னை விரும்பி ஓடி வருகின்ற அன்பர்கள் கண்டு நிரம்பப் புகழ்ந்து நாள் தோறுமே துதித்த மலைமகள்
கடல் நீரில் பள்ளி கொண்டிருக்கும் நீல நிறத்தி - வைஷ்ணவி, சூலாயுதத்தை ஏந்தினவளாகிய பார்வதிக்கு செல்வமாய் அமைந்த மைந்தனே

(66) <u>ஞான விபூஷணி</u> (கி.வ: 372; செ: 1163-1. ம: 1162)

ஞான விபூஷணி, கார் அணி, காரணி
காம விமோகினி, வாகினி, யாமளை.
மாமாயி, பார்வதி தேவி, குணதரி உமையாள் தன்

(67) <u>தசையு முதிரமு</u> (கி.வ: 373; செ: 1007; 1004)

அசல குலபதி தரும் ஒரு திருமகள்,
அமலை விமலைகள் எழுவரும் வழிபட
அருணி அருணையில் உறைதரும் இறையவள் அபிராமி
அநகை, அநுபவை, அநுதயை, அபிநவை
அதல முதல் எழு தலம் இவை முறை முறை
அடைய அருளிய, பழையவள் அருளிய சிறியோனே

(68) <u>புகரில் சேவல</u> (கி.வ: 399; செ: 1176; ம: 1177)

வேதமு நின்று மணம் கமழ் அபிராமி
முகர நூபுர பங்கய சங்கரி
கிரி குமாரி, த்ரியம்பகி தந்தருள் முருகனே.

(69) <u>சிவஞான புண்டரிக</u> (கி.வ: 366; செ: 1240; ம: 1244)

உபகாரி, அன்பர் பணி கலியாணி, எந்தை இடம்
உறை நாயகம் கவுரி சிவகாமி
ஒளிர் ஆனையின் கரமில் மகிழ் மாதுளம் கனியை
ஒரு நாள் பகிர்ந்த உமை அருள் பாலா



<u>ஞான விபூஷணி, மாமாயி, குணதரி</u>

ஞானத்தை விசேட ஆபரணமாகக் கொண்டவள், கரிய நிறம் கொண்ட, சகலத்துக்கும் காரணமாயிருப்பவள். காமத்தை உயிர்களுக்கு ஊட்டும் (வி) சிறந்த மோகினி. (வாகினி) யாதிரிமர நிழலில் சிவபெருமானைப் பூஜித்த உமாதேவி. பச்சை நிறத்தி. மாயையில் வல்லவள். பார்வதி தேவி நற்குணங்களை உடையவள் ஆகிய உமையின்

<u>அநகை. அநுபவை, அநுதயை, அபிநவை</u>

மலைகளுள் சிரேஷ்டமான இமய பர்வதராஜன் என்ற ஒப்பற்ற அழகிய மக ளாகிய பார்வதி, மலமற்றவள். சப்த மாதர்களும் தன்னை வழிபட அவர்க ளுக்கு அருள் செய்து திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் தேவி அபிராமி பாவமற்றவள். ஞான அநுபவத்தை உடையவள், தயையோடு கூடியவள், என்றும் புதியவள், அதலம் முதலான ஏழு உலகங்களுக்கும் முறைப்படி முறைப்படி (சகல செல்வங்களையும்) அடைய அருள் பாலிக்கும் பழைய வள் ஆகிய பார்வதி அருளிய சிறியோனே.

<u>வேதமு நின்று மணம் கமழ் அபிராமி</u>

வேதங்களும் நின்று தொழ ஞான மணம் வீசுகின்ற அபிராமி - அழகி ஒலிக்கின்ற சிலம்பணிந்த தாமரை போன்ற திருவடிகளை உடைய சங்கரி இமயகிரியின் குமரி, முக்கண்ணி ஆகிய பார்வதி

<u>உபகாரி, அன்பர் பணி கலியாணி</u>

யாவர்க்கும் உதவி செய்பவள். அன்பர்கள் பணிகின்ற கலியாணி. எந்தை சிவனது இடது பாகத்தில் உறைகின்ற தலைமை வாய்ந்த கவுரி. சிவகாமி விளங்குகின்ற விநாயகருடைய கரத்தில் (யாவரும்) மகிழும் படியான மாதுளம் பழத்தை முன்பொரு நாள் கொடுத்த உமை அருள் பாலா

(70) <u>நாவிரண்டிதழாலே</u> 

(கி·வ: 385; செ: 1001; ம: 998)

அல சுந்தரி மோடா மோடி, கு
மாரி, பிங்கலை, நாரை தேசிய
மோகி, மங்கலை, லோகா லோகி, யெ உயிர்பாலும்

அணை சம்ப்ரமி, மாதா, மாதவி,
ஆதி அம்பிகை, ஞாதா அனவர
அட, மன்றினில் ஆட நாடிய அபிராமி
கால சங்கரி, சீலா சீலி, த்ரி
சூலி மந்த்ர சுபாஷா பாஷிணி,
காள கண்டி, கபாலி, மாலினி கலியாணி

காம தந்திர லீலா லோகினி
வாம தந்திர நூல் ஆய்வாள், சிவ
காம சுந்தரி வாழ்வே, தேவர்கள் பெருமானே

(71) <u>வரிவிழி சுச</u> (கி·வ: — ; செ: 1276; ம: 1277)

திரு நடமாடு காளி, பயிரவி, மோடி, சூலி
திரிபுர நீறதாக அனல் மோதுஞ்

சிவை கயிலாச வாசி மலைமகள் நாரி, பாரி
திருமுலை ஆயி, தாயி அருள் பாலா

<u>காலசங்கரி, சீலாசீலி, த்ரிசூலி</u> 

விஷம் பொருந்திய கழுத்தை உடையவள், ஆடம்பரமுள்ள துர்க்கை குமாரி (மூப்பு இல்லாதவள்), பொன்னிறத்தவளாம் காகினி, பலவித அணிகளில் ஆசை பூண்டவள், என்றும் சுமங்கலி, எல்லா உலகங்களையும் ஈன்று புரப்பவள், எல்லா உயிர்களிடத்தும்

அன்பு வைத்துள்ள பெருமிதம் உடையவள், தாய், (மாதவி) துர்க்கை ஆதி நாயகி, அம்பிகை, எல்லாம் அறிந்த இறைவன் நடிக்க, (அவருடன்) அம்பலத்தே ஆட விரும்பின அழகி

யமனைச் சங்கரித்தவள், பரிசுத்த தேவதைகளுக்குள் மிகப் பரிசுத்தமானவள், முத்தலைச் சூலத்தை ஏந்தியவள், மந்திரங்களின் நல்ல சொற்களைப் பேசுபவள், கறுத்த நீல நிறக் கழுத்தை உடையவள், கபாலத்தை ஏந்தியவள், மாலையை அணிந்தவள் (அல்) அசுரர்களின் தெய்வமாக இருப்பவள், நித்ய கல்யாணி

காம சாத்திரம் கூறும் லீலைகளை லோகத்தில் நடத்தி வைப்பவள், (வாம தந்திர நூல்) சக்தி உபாசனை முறையைக் கூறும் ஆகம நூலால் ஆராயப்பட்டவள் ஆகிய சிவகாம சுந்தரியாம் பார்வதியின் செல்வமே! தேவர்கள் பெருமானே

<u>சிவை, கயிலாச வாசி, மலைமகள்,</u>

திரு நடனம் ஆடுகின்ற காளி, பயிரவி, (மோடி) துர்க்கை - காருகாள் சூலம் ஏந்தினவள், திரிபுரத்தைப் பொடியாகும்படி நெருப்பை வீசித் தாக்கின

சிவாம்பிகை, கயிலாயத்தில் வசிப்பவள், மலைகுமாரி, நாரி (பாரி) பெரியவள் (அல்) உலகமாதா, திருமுலை கொண்ட ஆத்தாள், தாய் ஆகிய தேவி அருளிய பாலனே.

(72) வேத வித்தகா (கிரு.421: செ: 997; 10: 994)

புண்டரீக மீதிருக்கும் நா மாதோடு, செயிதழ்
மீது இருக்கும் ஏர் ஆர் மா, புலோமசை,
வீரம் மிக்க ஏழ் பேர் மாதர், நீடினம் நின்று நாளும்

வேத வித்தகீ, வீமா, விராகிணி,
வீறு மிக்க மா வீணை கரே, மக
மேரு வாழ் சீரே, சிவாதரே அங்கராகீ

ஆதி சக்தி, சாமா தேவி, பார்வதி
நீலி, துத்தியார் நீள் நாக பூஷணி
அயி, நித்தியே, கோடீர மாதவி என்று தாழும்.

ஆர்யை பெற்ற சீராளா நமோ நம
சூரையட்டு நீள் பேரா நமோ நம

(73) ஆசைநேச மயக்கி (கிரு: —; செ: 1213: 10: 1214)

ஈசரோடு உறவுற்றவள் உமை அயி,
யோகி, ஞானி, பரப்ரமி, நீலி நாரணி உத்தமி
ஓலமான மறைச்சி, சொல் அபிராமி
ஏசு இலாத மலைக்கொடி தாய் மனோமணி சற்குணி
ஈறிலாத அமலைக்கொடி அருள்பாலா



வேத வித்தகீ, வீமா, விராகிணி, சாமா தேவி

(வெள்ளைத்) தாமரையின் மேலே வீற்றிருக்கும் சரஸ்வதியுடனே, சிவந்த இதழ்களை உடைய செந்தாமரை மீது வீற்றிருக்கும் (ஏர் ஆர்) அழகு நிறைந்த (மா) இலக்குமியும், (புலோமசை) இந்திராணியும், வீரம் மிகுந்துள்ள சப்த மாதாக்களும், அவர்களுடன் (நீடினம்) கூடி நிற்கும் எல்லாத் தெய்வ மகளிரும் நின்று நாள் தோறும்

வேத ஞானியே! பயங்கரியே! (விராகிணி) பற்றற்றவளே! (வீறு) சிறப்பு நிரம்பி உள்ள அழகிய வீணையைக் கையில் ஏந்தியவளே! மகா மேரு போல விளங்கி வாழும் சிறப்பை உடையவளே! சிவனுடைய தேகத்திற் பங்கு கொண்டவளே! பரிமள திரவியங்களைப் பூசியுள்ளவளே

ஆதி சக்தியே! சாம வேதம் போற்றும் தேவியே! (அல்) சாம நிறம் கொண்ட தேவியே! பார்வதி, நீல நிறத்தவளே! புள்ளிகள் நிறைந்த பெரிய பாம்புகளை அலங்காரமாக அணிந்தவளே! தாயே! என்றும் இருப்பவளே! (அழிவில்லாதவளே) கோடீரம்-சடையுள்ள துர்க்கா தேவி என்று தோத்திரம் செய்து வணங்குகின்ற —

ஆர்யை பெற்ற சீராளனே நமோ நம! சூரனை வதைத்துப் பெரும் புகழ் பெற்றவனே நமோ! நம! (ஆர்யை = மேலானவள்)

ஏசிலாத மலைக்கொடி, மனோமணி, சற்குணி

சிவபெருமானுடன் சேர்க்கை கொண்டவள், உமையம்மை, யோகி, ஞானி, முழுமுதற் தேவி, நீல நிறத்தி, துர்க்கை, உத்தமி, ஓலியுடன் சொல்லப்படும் வேதத்தினள், (சொல்) புகழ்கொண்ட அபிராமி

இகழ்ச்சி என்பதே இல்லாத (அல்) குற்றம் இல்லாத மலைப் பெண், தாய், மனத்தை ஞானநிலைக்கு எழுப்புபவள், நற்குணத்தை உடையவள், முடிவில்லாத அழிதல் இல்லாத (அமல) மலமற்ற கொடி ஆகிய பார்வதி அருள் பாலா —

(74) பூத கலாதி (கி.வ:402; செ:1263; ம:1264) (24)

மாது. சர்வேஸ்வரி. வஞ்சி. காளி, பிடாரி, விபஞ்சி
வாணி. வராகி. மடந்தை அபிராமி
வாழ் சிவகாம சவுந்தரி, ஆலம் மேலாம் முக பஞ்ச
வாலை. புராரி. இடம் தரு உமை. ஆயி

வேத புராணம் விளம்பி, நீல முராரியர் தங்கை
மேலொடு கீழ் உலகங்கள் தரு பேதை

வேட மெலா முக சங்க பாடலொடு ஆடல் பயின்ற
வேணியர் நாயகி தந்த பெருமாளே.

(75) இடமருது (கி.வ: — ; செ:1133; ம:1130)

படி முழுதும் கூர்த்த மா குலத்தி
(முது மறையின் பேச்சி), நூல் கிடைச்சி
பகிர் மதியம் பூத்த தாழ் சடைச்சி இருநாழி

படி கொடு அறம் காத்த மா பரைச்சி
மணி வயிரம் கோத்த தோள் வளைச்சி,
பல திசையும் போய்க் குலா விருப்பி நெடு நீலி

அடு புலியின் தோற் படாம் உடைச்சி
சமர முகம் காட்டு மால் விடைச்சி
அகிலம் உண்டார்க்கு நேர் இளைச்சி பெருவாழ்வே

பிடாரி, விபஞ்சி, ஆலம் மேலாம் முக பஞ்ச வாலை (24)

மாது, சர்வேசுரி, வஞ்சிக் கொடி போன்றவள். காளி. பிடாரி. (விபஞ்சி) வீணையை ஏந்தியவள், வாணி. வராகி. மாது. அழகி வாழ்வு பொலியும் சிவகாம சௌந்தரி. (ஆலம் மேலாம்) பிரளய கால வெள்ளத்தின் மேலாகிய பஞ்சமுக பாலாம்பிகை. திரிபுரத்தை எரித்த சிவனது இடது பாகத்துக்குத் தக்க உமை, தாய்

வேதங்களையும், புராணங்களையும் சொன்னவள்; நீல நிறம் உள்ள முரன் என்னும் அசுரனுக்குப் பகைவருமாகிய திருமாலின் தங்கை. மேலொடு கீழாக பதினாலு உலகங்களையும் தந்த மாது

ஆடலுக்குரிய வேடங்கள் எல்லாம் நிலை கலங்க, சங்கம் - சபையில், பாடலும் ஆடலும் பயின்ற சடைப் பெருமானது தேவி - ஆகிய பார்வதி தந்த பெருமாளே.

இருநாழி படி கொடு அறம் காத்த மா பரைச்சி

உலகம் முழுவதும் நிறைந்து நிற்கும் சிறந்த (குலத்தி) அழகி, வேதப் பொருள்களையே பேசுபவள் (அல்) மறையால் பேசப்படுபவள், நூல் போன்ற நுண்ணிய இடையை உடையவள். பிறைச் சந்திரன் விளங்குவதும் தாழ்ந்து தொங்கும் (வதுமான) சடையினை உடையவள். இரண்டு நாழி எனப்படும் படி (நெல்) கொண்டு (32) அறங்களையும் நடத்திப் போற்றின சிறப்பு வாய்ந்த பரதேவதை, ரத்னங்களையும் வயிரங்களையும் கோத்த வளையல் அணிந்த தோளை உடையவள், பல திசைகளிலும் சென்று விளங்கும் விருப்பத்தை உடையவள். பெருமை மிக்க நீல நிறம் உடையவள்

கொல்ல வரும் புலியின் தோலை (படாம்) சேலையாக உடுத்தினவள், போர் செய்யும் முகத்தைக் காட்டும் பெரிய இடபத்தை வாகனமாக உடையவள், உலக முழுமையும் உண்ட திருமாலுக்கு நேர் தங்கை - பார்வதியின் பெரும் செல்வமே -

(76) <u>அயிலின் வாளி</u> <u>(திரு: — ; செ: 1049 : ம: 1046)</u> (25)

மயிலு மேக நீகார சயில ராசன் வாழ்வான
பவதி யாமளா வாமை — அபிராமி

பரிபுர அர பாதார சரணி, சாமள ஆகார
பரம யோகினி மோகி — மகமாயி
கயிலையாளர் ஓர் பாதி, கடவுளாளி, லோகாயி.
கனதன அசலா பார — அமுதூறல்

கமழும் அராக கீத கவிதை வாண வேல் வீர
கருணை மேருவே தேவர் — பெருமானே.

(77) <u>புனமடந்தைக்கு</u> <u>(திரு: 436 ; செ: 456 : ம: 314)</u>

கரிமுகன் சித்ரப் பொற்புகர் வெற்பன்தனை — ஈனும்

பனவி. ஒன்று எட்டுச் சக்ரதலப் பெண்
கவுரி. செம்பொற் பட்டு உத்தரியப் பெண்
பழய அண்டத்தைப் பெற்ற மடப் பெண், பணிவோரை
பவ தரங்கத்தைத் தப்ப நிறுத்தும்
பவதி. கம்பர்க்குப் புக்கவள் பக்கம்
பயில், வரம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமானே.

<u>பரிபுர அர பாதார, சரணி), சாமள ஆகார பரம யோகினி</u> (25)

நெருங்கி எழும் மேகங்களின் (நீகாரம்) கூட்டம் படிகின்ற மலை அரசனும் இமவானுடைய செல்வப் புதல்வியான பவதி (தேவி) சியாமள நிறத்தை உடையவள். அழகிய (அல்) இடது பாகத்தில் உள்ள சிவசக்தி. அபிராமி சிலம்பும் கடம்பும் உள்ள பாததாமரையாம் திருவடிகளை உடையவள், பசுமை உருவம் கொண்ட பரதேவதை. அன்பு ஊட்டுபவள், மகமாயி சிவனது ஒருபாதியில் உள்ளவள், எல்லாத் தேவர்களையும் ஆள்பவள், உலகம்மையார் - ஆகிய தேவியின் கனத்த (அல்) பொன்னிறமான கொங்கை மலைகளாம் பாரங்களினின்றும், ஊறின பாலமுதின் நறுமணம் வீசும் வேத கீதப் பாக்களான தேவாரத்தைப் பாடின வேல் வீரனே! கருணை மேருவே! தேவர் பெருமானே!

<u>துதி. யானை: ஒன்று எட்டுச் சக்ரதலப் பெண்.</u>

யானை முகத்தினர், அழகிய பொலிவுள்ள புள்ளிகளையுடைய மலை போன்றவராகிய கணபதியை ஈன்ற.
பார்ப்பனி. நவசக்ர பீடத்துப் பெண், கவுரி. செவ்விய. அழகிய பட்டாலாய மேலாடை அணிந்துள்ளவள், பழமையானவள், அண்டங்களை ஈன்றவளுமாகிய மட மங்கை. தன்னைப் பணிவோருடைய பிறப்பு என்னும் அலைகடலை விலக்கி நிறுத்தும் தேவி, ஏகாம்பர நாதரை அடைந்தவள், (மணந்தவளாம்) காமாக்ஷியம்மையின் அருகில் இருக்கும்படியான வரத்தைப் பெற்று கச்சியில் நின்றருளும் பெருமானே.

(78) கறை கிலங்கு (கி.வ: 427 : செ: 457; ம: 315) (26)

பிறை, கரந்தைக் கொத்துப், பணி, மத்தத்
தலை எலும்பு, அப்புக், கொக்கு இறகு, அக்கம்,
பிரமன் அன்று எட்டற்கு அற்ற திருக் கொன்றையும் வேணிப்
பிறவு. நின்று ஒக்கத் தொக்க மணக்கும்
சரணி. அம் பத்மக் கைக் கொடி, முக்கண்
பெறு கரும்பு அத் தக்கத்து அருள்நற பங் கய வாவி

திறை கொளும் சித்ரக் குத்து முலைக் கொம்பு
அறியும் அம் தத்தை, கைக்கு அகம் மொய்க்கும்
த்ரிபுரை செம்பட்டுக் கட்டு நுசுப்பின் திருவான
தெரிவை, அம் துர்க்கிச் சத்தி, எவர்க்கும்
தெரி அரு சுத்தப் பச்சை நிறப் பெண்
சிறுவ, தொண்டர்க்குச் சித்தி அளிக்கும் பெருமானே.

(26) பொருள்: ஈசன் சடையில் உள்ள யாவும் மணக்கும் சரணி.

நிலவு. திருநீற்றுப் பச்சைக் கொத்துகள், பாம்பு, ஊமத்தம் பூ, பிரம்ம
கபால எலும்பு, கங்கை நீர், கொக்கிறகு, ருத்ராக்ஷ மாலை, பிரமன் அன்று
எட்டுதற்கு அரிதாக இருந்த அழகிய கொன்றை இவையெல்லாம் அணிந்த சடை
(சடையில் உள்ள) மற்றவையும், நிலை பெற்று ஒன்று சேர்ந்து கூடி,
மணம் வீசும் திருவடியை உடையவள் (சிவபெருமான், தனது பாதத்தில்
வீழ்ந்து வணங்குவதால் அவர் சிரசில் இருந்த எல்லாப் பொருள்க
ளின் மணமும் தனது திருவடியிற் பொருந்தி வீசப் பெற்றவள்)
அழகிய தாமரை போன்ற திருக்கரத்தை உடைய கொடி போல்
வாள், மூன்று கண்கள் கொண்ட கரும்பு போன்றவள் (அ தக்கது
அருள்) அந்த தக்கதான பொருளை (எது தக்கதோ அதை அறிந்து)
அருள்பவள், நல்ல திருக்குளத்துத் தாமரையும்

கப்பம் கட்டச் செய்யும் (வென்று அடக்கும்) அழகிய திரண்டு
உவந்த தனங்களையுடைய கொம்பு போன்றவள், எல்லாவற்றை
யும் அறிந்த (ஞானமுள்ள) அழகிய கிளி. கையினிடத்தே பயின்று
இருக்கும் த்ரிபுரை (சந்திர கண்டம், சூரிய கண்டம், அக்கினி கண்டம்
என்னும் முப்பிரிவையுடைய சக்கரத்துக்குத் தலைவி) சிவந்த
பட்டாடை யுடுத்துள்ள இடையையுடைய, லக்ஷ்மிகரம் பொருந்திய
நங்கை. அழகிய துர்க்கா தேவி, சக்தி. எவர்க்கும் தெரிவதற்கு
அரிதான, தூய பச்சை நிறம் கொண்ட பெண் ஆகிய பார்வதி
தேவியின் திருக்குமாரனே! அடியார்க்கு வீடு பேற்றை
அளிக்கும் பெருமானே.

(79) கனி தரும் (கி.வ: 428; செ:460; ம:318)

அனனியம் பெற்று அற்று அற்று அரு பற்றும்
தெளிதரும் சித்தர்க்குத் தெளிசிற கொந்து
அமல- தென் கச்சிப் பிச்சி மலர்க் கொந் தளபாரை

அறவி, நுண்பச்சைப் பொற் கொடி, கற்கண்டு
அமுதினும் தித்திக்கப்படும் சொற் கொம்பு,
அகில அண்டத்து உற்பத்தி செய் முத்தின் பொலமேரு

தனிவடம் பொற்புப் பெற்ற முலைக்குன்று
இணை சுமந்து எய்க்கப்பட்ட நுசுப்பின்
தருணி, சங்கு உற்றுத் ததத்து திரைக் கம் பையின் கடே
தவம் முயன்று அப்பொற்றப் படி கைக்கொண்டு
அறம் இரண்டு எட்டு, எட்டு எட்டும் வளர்க்கும்
தலைவி பங்கர்க்கு சதயம் உரைக்கும் பெருமாளே.

வர்ணனை: அறம் இரண்டு எட்டு, எட்டு எட்டும் வளர்க்கும் தலைவி.

அன்னியமில்லாத ஒன்றாந் தன்மையை (அத்துவைத நிலையை) பெற்று, எவ்வித பற்றும் நன்கு அற்றுப் போய், தெளிவு அடைந்த சித்தத்தவர்கள் தெளிந்து உணர்ந்த அறிவுருவான, பூங்கொத்துக்கள் அணிந்த மலமற்றவள் - நிர்மலி - அழகிய கச்சிப்பதியில், பிச்சி மலரை அணிந்துள்ள கூந்தலை உடைய (பாரை-பறை) பராசக்தி

அறச்செல்வி - புண்ணியவதி - அறம் வளர்த்த நாயகி - நுண்ணிய பச்சை நிறம் உள்ள அழகிய கொடி போன்றவள், கற்கண்டு அமிர்தம் என்ற இரண்டினும் மிகுதியாக இனிக்கின்ற சொற்களையுடைய பூங்கொம்பு போன்றவள், எல்லா அண்டங்களையும் தோற்றுவிக்கும், அழகிய முத்தாலாகிய மேருமலை போன்றவள்

ஒப்புற்ற மணி வடத்தின் அழகு பெற்ற கொங்கை மலையைச் சுமந்து அதனை இளைத்து நிற்கும் இடையை உடைய இளமைப் பருவத்தினள், சங்குகள் பொருந்தித் ததும்பிப் பரவிச் செல்லும் அலைகளையுடைய கம்பை ஆற்றுக்கு அருகே தவம் செய்து அந்த (போற்ற) சிறந்த படியை (இருநாழிநெல்) கையிற் கொண்டு அறம், இரண்டு எட்டு (2×8=16), எட்டு (8) எட்டும் (8) முப்பத்திரண்டையும் வளர்த்த தலைவி காமாட்சி தேவியின் பங்காளராம் சிவபெருமானுக்கு மெய்ப்பொருளை உபதேசித்த பெருமாளே.

(80) கலைவலயத்து (கி.வ: 432; செ:464: ம:322)

குல சயிலத்துப் பிறந்த பெண்கொடி
உலகு அடையப் பெற்ற உந்தி அந்தணி)
குறைவற முப்பத்திரண்டு அறம் புரி கின்ற பேதை

வர்ணனை: குறைவற முப்பத்திரண்டு அறம் புரிகின்ற சக்ரப்ரசண்ட சங்கரி

சிறந்த மலையாம் இமயத்தில் பிறந்த பெண்கொடி. உலகு எல்லாவற்றையும் ஈன்ற திருவயிற்றை உடைய அழகிய தட்பம் உடையாள் (குளிர்ந்த குணம் உடையாள்) குறைவு இல்லாத வகையில் முப்பத்திரண்டு அறங்களைச் செய்கின்ற தேவி

குணதரி, சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்நப் புயங்க கங்கணி
குவடு குனித்துப் புரஞ் சுடும் சின - வஞ்சி, நீலி,

கலப விசித்ரச் சிகண்டி சுந்தரி
கடிய விடத்தைப் பொதிந்த சுந்தரி
கருணை விழிக், கற்பகந், திகம்பரி எங்கள் ஆயி

கருதிய பத்தர்க்கு இரங்கும் அம்பிகை
சுருதி துதிக்கப்படும் த்ரியம்பகி
கவுரி திருக்கோட்டம் அமர்ந்த இந்திரர் தம்பிரானே

(81) தெரிய வரு (இ.வ.– : செ.455; 10:313)

தனி சிவன் பக்கத்து அற்புதை, பட்பந் திரிசூலந்
தரி, கரும்பு நக்கத் தக்க மொழிச் சுந்
தரி, அரும்பி குப்பித்த தனத்து அந்
தரி சுரும்பு இக்குப் பத்ரை எவர்க்குந் தெரியாத

பெரிய
பண தத்தைச், சத்திய பித்தன்
ப்ரிதி உண் கற்பு பச்சை எறிக்கும்
ப்ரபையள் தண்டில் கை, பத்ம மடப் பெண் கொடி, வாழ்வே



நற்குணங்களைத் தரித்தவள். (சக்ரம்) மந்திர யந்திரத்தில் வீரத்துடன் விளங்கும் சங்கரி. கூட்டமான படங்களை உடைய இரத்ன மணியைக் கொண்ட பாம்பைக் கை வளையலாக அணிந்தவள், மேரு மலையை வளைத்துத் திரிபுரத்தை எரித்த கோபங் கொண் வஞ்சிக் கொடி போன்றவள். நீல நிறமுடையவள்

(விசித்ர கலப சிகண்டி) விசித்ரமான தோகையைக் கொண்ட மயில் ரூபம் கொண்டவள், அழகி. பொல்லாத நஞ்சினை அடக்கி வைத்துள்ள கழுத்தை உடையவள், வேண்டுவார்க்கு வேண்டுவதை அளிக்கும் கற்பகம் போன்றவள், கருணை நிறைந்த கண்ணினள், திசைகளை ஆடையாக உடையவள் (நிர்வாணி) எங்கள் தாய்

தியானிக்கின்ற பக்தர்கட்கு கருணை புரியும் அம்பிகை, வேதங்கள் துதி செய்யும் மூன்று கண்களையுடையவள், காமாட்சியின் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும், தேவேந்திரர்கள் துதிக்கும், பெருமா

பட்பந் திரிசூலந்தரி அந்தரி. சுரும்பு இக்குப் பத்ரை

நப்பற்ற சிவனது பக்கத்தில் உள்ள அற்புதத் தலைவி, திருநீறு முத்தலைசூலம் தரித்துள்ளவள், கரும்புக்கு நப்பு என்று சொல்லத்தக்க சொற்களை உடைய சுந்தரி. தோன்றிக் கிளைத்த (பரவியுள்ள) தனங்களை உடைய முடிவில்லாதவள், வண்டுகள் மொய்க்கும் கரும்பை ஏந்திய (பத்ரை) காளி, யாரும் அறிய நுண்ணுத

பெருமை மிக்க பண் போன்ற மொழியை உடைய கிளி போன்றவள் சத்தியத்தில் மிக்க ஈடுபாடுடைய பித்தன் சிவனுடைய அன்பை உட்கொண்ட கற்பு வாய்ந்த பச்சை ஒளி வீசும் பேரொளியாள், வீணை ஏந்திய கையினள் தாமரையில் வீற்றிருக்கும் மடமங்கை. கொடி போல் வாளாகிய பார்வதி..

(84) <u>சலமலம் விட்டுத்</u> (இ·அ:– ; செ:463: ம:321) (30)

சிலையும் எனப் பொற சிலம்பை முன், கொடு,
  சிவமயம் அற்றுத் திடம் குலைந்தவர்
  திரிபுரம் அத்தைச் சுடும் தினம், தரி  திண்கையாளி)

திருமகள், கச்சுப் பொருந்திடும் தன
  தெரிவை, இரக்கத்துடன் பிறந்தவள்,
  திசைகளில் நக்கப் படர்ந்து இடம் பொரு  கின்ற ஞானக்
கலைகள் அணைக் கொத்து அடர்ந்து, வம்பு அலர்,
  நதி கொள் அகத்திற் பயந்து, கம்பர் மெய்
  கருக, இடத்திற் கலந்து இருந்தவள்  கச்ச பாதம்

கருணை மிகுத்துக் கசிந்து உளம் கொடு
  கருதும் அவர்க்குப் பதங்கள் தந்தருள்
  கவுரி திருக்கோட்டமர்ந்த இந்திரர்  தம்பிரானே

<u>வர்ணனை: கருதும் அவர்க்குப் பதங்கள் தந்தருள் கவுரி.</u> (30)

வில் என்று பொன் மலையாம் மேருவை, முன்னொரு காலத்தில், கையிற் கொண்டு, சிவ வழிபாட்டைக் கை விட்டுத் தமது சக்தி குலைந்த அசுரர்களைத் - திரிபுரத்தை எரித்த அந்த தினத்தில் தரித்த (வில்லாக மலையைத் தரித்த) வலிய திருக்கரத்தைக் கொண்டவள்

அழகிய தேவி. ரவிக்கை பொருந்திய தனங்களைக் கொண்ட மாது, கருணையுடனே தோன்றியவள், திசைகள் எல்லாவற்றிலும் வியாபித்து இடங் கொண்ட ஞான-

நூல்கள் அனைத்த கொத்து (திரள்) திரண்ட கலை நூல்கள் அனைத்தையும் அடர்ந்து (நிரம்பப் பழகி) வம்பு அலர் (புது மலர்களை) - (கொள் நதி அகத்தில்) கொண்ட கம்பை நதி கரையகத்தே, பயந்து (அந்தக் கம்பை நதியின் வெள்ளத்தைக் கண்டு பயந்து) கம்பர் - ஏகாம்பர நாதரது (மெய்) சிவந்த உடல் (கருக) தனது கரு நிறத்தை ஏற்றுக் கொள்ளும்படி, இடது பாகத்தில் கலந்திருந்த தேவி, தனது தாமரை யன்ன திருவடிகளை - திருவடித் தாமரைகளை

அன்பு மேலிட்டுக் கசிந்த உள்ளத்தோடு தியானிக்கும் அடியார்களுக்கு (மேலான) பதவிகளைத் தந்தருளுகின்ற கவுரியம்மை ஆகிய தேவியின் திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற . . .

(85) <u>நலமறைகள்</u> (இ·அ: 442; செ: 501 ; ம: 359)

ஞால முதல்வி, இமயம் பயந்த மின்
  நீலி. கவுரி, பரை. மங்கை. குண்டலி
  நாளும் இனிய கனி, எங்கள் அம்பிகை  த்ரிபுர ஆயி

<u>வர்ணனை: ஞால முதல்வி. நாத வடிவி. அகிலம் பரந்தவள்.</u>

உலகங்கட்குத் தலைவி. இமவான் பெற்ற மின்னல் போன்ற ஒளியுடையவள், நீல நிறமுடையவள், பொன்னிறமுடையவள், பராசக்தி மங்கை. குண்டலி சக்தியாக விளங்குபவள். என்றும் இனிய கனி போன்றவள், எங்கள் அம்பிகை. மூன்று உலகங்களையும் பெற்றவள்.

நாத வடிவி . அகிலம் பரந்தவள்
ஆலின் உதரம் உள பைங்கரும்பு . வெண்
நாவல் அரசு மனை, வஞ்சி தந்தருள் பெருமானே.

(86) <u>பரிமள மிகவுள</u> <u>(தி.வ: 445: செ. 507: ம. 365)</u>

கருதலர் திரிபுரம் மாண்டு நீறு எழ
மலைசிலை ஒரு கையில் வாங்கு நாரணி
கழல் அணி மலைமகள் காஞ்சிமா நகர் உறை பேதை
களிமயில், சிவனுடன் வாழ்ந்த மோகினி
கடல் உடை உலகினை ஈன்ற தாய் உமை
கரிவனம் உறை அகிலாண்ட நாயகி அருள்பாலா

(87) <u>கருணை சிறிதுமில்</u> <u>(தி.வ: 457: செ. 511: ம. 369)</u>

தருண சததள பரிமள பரிபுர
சரணி, தமனிய நதுதரி, திரிபுர
தகனி, கவுரி, பவதி, பகவதி பயிரவி சூலி

சடிலதரி, அநுபவை, உமை, திரிபுரை
சகல புவனமும் உதவிய பதிவ்ரதை
சமய முதல்வி தனய, பகிரதி சுத



நாத வடிவமாக விளங்குபவள் . எங்கும் நிறைந்தவள், ஆலிலை போன்ற
வயிற்றை உடைய பசிய கரும்பு அனையவள், வெண்நாவல் மரத்தின்
கீழ் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் மனைவி. வஞ்சிக் கொடி
போன்றவளுமாகிய அகிலாண்ட நாயகி தந்தருளிய பெருமானே.

<u>வர்ணனை. கரிவனம் உறை அகிலாண்ட நாயகி</u>

பகைவர்களுடைய திரிபுரங்கள் அழிந்து தூளாக மேரு மலையை வில்லாக ஒரு
கையில் வளைத்த நாரணி . சிலம்பு அணிந்த மலைமகள், காஞ்சி மா
நகரில் விளங்கும் தேவி (காமாக்ஷி)
மகிழ்ச்சியுடைய மயில் போல்வாள், சிவபெருமானுடன் வாழும் அழகி.
கடல் ஆடையாகக் கொண்ட உலகை ஈன்ற தாய் உமா தேவி.
திருவானைக்காவில் வாழ்கின்ற அகிலாண்ட நாயகி அருளிய பாலகனே!

<u>வர்ணனை: திரிபுர தகனி, கவுரி, பவதி, பகவதி, பயிரவி, சூலி.</u>

என்றும் இளமையொடு கூடியதாய் . நூறு இதழ் தாமரை போல்வதாய், நறுமணம்
வீசுவதாய், சிலம்பு அணிந்ததாயுள்ள திருவடிகளை உடையவள், பொன் மலை
யாகிய மேருவை வில்லாக ஏந்தினவள், திரிபுரங்களை எரித்தவள், பொன்னி
றமுடையவள், (பவதி) பிறப்பை போக்குபவள், ஆறுகுணங்களையுடையவள்
பைரவியாகத் தோன்றினவள். சூலம் ஏந்தியவள்
சடை தரித்தவள், போகங்களை நுகர்விப்பவள், உமை. மூன்று உலகங்
கட்கும் தலைவி. எல்லா உலகங்களையும் ஈன்றருளிய பதிவ்ரதை
(பதி வழிபாட்டினையே விரதமாகக் கொண்டவர்) எல்லாச் சமயங்
கட்கும் முதல்வி ஆகிய பார்வதியின் புதல்வனே! கங்கா தேவியின்
மைந்தனே!

(88) தமர குரங்கரும் (இ.வ: 464; செ: 567 : ம: 426)

இமகிரி வந்த பொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலம் பெறும் பூவை. சத்தி. அம்பை
இளமுலையின் செழும் பால் குடித்து இலங்கும் இயல்
நிமிர்த்திடுவோனே

(89) காராடக்குழ (இ.வ: — ; செ: 554 ; ம: 412)

சிவ அநுபங்கு உறை என்றன் மாதா
மாலோனுக்கு இளையாள் மா பத்தினி
அம்பிகை சங்கரி மோக சுந்தரி
வேத ஆகமக் கலைபோள், முக்கண்
நிரம்பிய கொங்கையினள் பயந்து அருள்
மா ஞானக் குமரா!

(90) சுக்கில் சுரோணி (இ.வ: — ; செ: 565 : ம: 423)

செ கரத்தின் மலை முப்புரத்தில் எரி
யிட்ட சத்தி, சிவன உற்று நத்த, மிகு
சித்து அனைத்தையும் விழித்த சத்தி உமை தந்தபாலா

(91) எழுகடல் மணலை (இ.வ: 478 ; செ: 634 : ம: 493)

விழு திகழ் அழகி மரகத வடிவி
விமலி முன் அருளும் முருகோனே



பொன் பாவை, பச்சை, வஞ்சி. பூவை. சத்தி. அம்பை

இமய மலையில் தோன்றிய பொன்னனையாள், பதுமை போன்றவள், பச்சை நிறத்து வஞ்சிக் கொடி போல்வாள், எல்லா உலகங்களையும் பெற்ற அன்னை, சத்தி, அம்பிகை ஆகிய பார்வதி தேவியின் இளங் கொங்கையின் செழுமையான பாலைக் குடித்து உலகமெல்லாம் விளங்கும் நல்லியல்பினை - ஒழுக்கங்களை சீர்படுத்தினவனே!

சிவ அநுபங்கு உறை என்றன் மாதா, வேத ஆகமக் கலைபோள்

சிவபெருமானொடு கூட அவர் திருமேனியிற் பாதியாக உறையும் எனது தாய், திருமாலுக்குத் தங்கை, மஹா பத்தினி, அம்பிகை, சங்கரி, அன்புக்கு உரிய சுந்தரி, வேத ஆகம நூல்களின் உருவம் வாய்ந்தவள், மூன்று கண்ணை உடையவள், பருத்த கொங்கையள், அத்தகைய பார்வதி பெற்றருளிய மஹா ஞானக் குமரனே!

மிகு சித்து அனைத்தையும் விழித்த சத்தி

செம்மையான திருக்கரத்தில் (மேரு) மலையாம் (வில்லை ஏந்தி) திரிபுரங்களில் நெருப்பு பற்றும்படிச் செய்த சத்தி (தேவி) சிவன் உடனிருந்து விரும்ப, மிக்க சித்துக்கள் யாவற்றையும், அட்டசித்திகள் முதலான சித்துக்களையெல்லாம் கண்ட சத்தி (சித்துக்களுக்குப் பிறப்பிடமான சத்தி) உமை பெற்ற குழந்தையே

விழு திகழ் அழகி மரகத வடிவி விமலி

(விழு) சிறந்த அழகி, விளங்கும் அழகி, மரகத வடிவினள், பரிசுத்தமானவள் ஆகிய பார்வதி முன்பு அருளிய முருகோனே.

(92) <u>மேக மொத்த குழ</u> (இ.வ:— ; செ:580: ம:439)

ஆகமத்தி, பல காரணத்தி, எனை
ஈண சத்தி, அரி ஆசனத்தி, சிவன்
ஆகம் உற்ற சிவகாமி, பத்தினியின் முருகோனே

(93) <u>விந்துப் புளகித</u> (இ.வ:— ; செ:585; ம:444)

தொந்திக் கடவுளை தந்திட்டவர் இட
சுகத்தி மழு உழை கரத்தி மரகத
நிறத்தி முயலக பதத்தி அருளிய முருகோனே.

(94) <u>தத்தையென</u> (இ.வ:— : செ:601 ; ம:460)

கொற்றர் பங்கு உற்ற சிந்தாமணிச், செங்குமரி,
பத்தர் அன்பு உற்ற எம் தாய், எழிற் கொஞ்சு கிளி,
கொட்புரம் தொக்க வெந்து ஆட விட்ட அங்கி விழி
மங்கை பாலா

(95) <u>முக சந்திர புருவம்</u> (இ.வ:— : செ:608 : ம:467)

அகரம் திரு, உயிர் பண்பு உற, அரி என்பதும் ஆகி
உறையும் சுடர் ஒளி, என் கணில் வளரும் சிவகாமி
அமுதம் பொழி பரை, அந்தரி; உமை பங்கு
அரனுக்கு உரு சேயே



<u>ஆகமத்தி, சிவன் ஆகம் உற்ற சிவகாமி.</u>

ஆகமங்களுக்கு உரியவள். பல காரணங்களுக்கு மெய்ப் பொருளானவள்; அடியேனை ஈன்ற சத்தி. சிம்மாசனம் கொண்டவள், சிவபெருமானது உடம்பில் இடங்கொண்ட சிவகாமி என்னும் பத்தினியின் இளம் குழந்தையே!

<u>மழு உழை கரத்தி முயலக பதத்தி.</u>

கணபதியைத் தந்தவர் ஆகிய சிவபெருமானது இடது பாகத்தில் உள்ள சுக சொரூபி, மழு மான் ஏந்தின கரத்தை உடையவள், மரகதம் போன்ற பச்சை நிறத்தினள், முயலகனை மிதித்த திருவடியினள் அருளிய முருகோனே.

<u>சிந்தாமணி, செங்குமரி, அங்கி விழி மங்கை</u>

வெற்றியாளராம் சிவபெருமானது (இடது) பக்கத்தில் உள்ள சிந்தாமணி அனையாள், செவ்விய குமரி. பக்தர்கள் அன்பு கொண்ட எனது தாய், அழகிய கொஞ்சும் கிளி (கொட்) கொட்கு- சுழன்று திரியும் திரிபுரங்கள் எல்லாம் வெந்து குலைய வைத்த நெருப்புக் கண்களைக் கொண்ட மங்கை (பார்வதி தேவியின்) பாலனே!

<u>அகரம் திரு, அமுதம் பொழி பரை, அந்தரி</u>

(எல்லா உயிர்களோடும்) மெய்களோடும் கலந்தும் வேறாகத் தனித்தும் நிற்கும்) அகர எழுத்துப் போலச் (சித்தும், அசித்தும் ஆகிய பிரபஞ்ச முற்றும் தோய்ந்தும் வேறாகத் தனித்தும் நிற்கின்ற- (திரு) செல்வி, (உயிர் பண்பு உற) ஆன்ம கோடிகள் உய்வு பெறும் பொருட்டு, திருமால் (என்னும் காக்கும் கடவுள்) ஆகி நிற்கும், பேரொளி, என் கண்களில் விளங்கி மகிழும் சிவகாமி, அமுத இன்பம் பொழிகின்ற பராசக்தி, பராகாச வடிவினள் ஆகிய உமாதேவியின் பாகத்தில் உள்ள அரனுக்கு உபயூற்ற சேயே

(96) எழுப்புத் தோல் (இ.வ:477; செ:626; ம:485) (34)

கிளர்ப் பொற் தோணி சராசர மேவியெ
அசைத்துப் பூசை கொள் ஆயி பராபரி
கிழப் பொற் காளை மேல் ஏறும் எம் நாயகி பங்கின் மேவும்

(97) நாடா பிறப்பு (இ.வ:488; செ:646; ம:505)

சூடாமணிப் பிரபை சோபா, கனத்த அரி
தோல் ஆசனத்தி உமை அருள்பாலா

(98) சகசம்பக் குடை (இ.வ:— ; செ:640; ம:499)

அகரம், பச்சை உருவோடு ஒளியுறை
படிகம், பொற், செயலாள், அரன் அரி
அயன் அண்டர்க்கு அரியாள் உமை அருள் முருகோனே

(99) நானு சதுரத்த (இ.வ: — செ:647; ம:506)

ஆலம் மலர் உற்ற சம்பவி. வேர் இலி. குலக் கொழுந்து இலி,
ஆரணர் தலைக் கலம் கொளி, செம்பொன் வாசி

ஆணவ மயக்கமும் கல்வி காமியம் அகற்றி என்றனை
ஆள் உமை பராசக்தி சுந்தரி கந்த தேவே

கிழப் பொற்காளை மேல் ஏறும் எம் நாயகி (34)

விளங்குகின்ற அழகிய தோள்களை உடையவள். அசையும் பொருள் அசையாப் பொருள் இவை இரண்டிலும் கலந்தும், அவைகளை ஆட்டுவித்தும் பூஜை பெறுகின்ற தாய். பழம் பொருளானவள் (கிழம்: உரிமை) தனக்கு உரிய அழகிய எருதின் மேல் ஏறும் எங்கள் தலைவியுமாகிய பார்வதி தேவியின் பக்கத்தில் இருப்பவரும்...

கனத்த அரி தோல் ஆசனத்தி

(சூடாமணி) தெய்வ மணியின் ஒளி விளங்கும் உருவத்தினள், பெருமை வாய்ந்த சிங்கத்தின் தோலை ஆசனமாக உடையவள் ஆகிய உமா தேவி அருளிய குழந்தையே.

அரன். அரி. அயன் அண்டர்க்கு அரியாள்

அகர எழுத்துப் போல முதல்வியாய். பச்சை நிறத்தவளாய். ஒளி பொருந்திய ஸ்படிகம். பொன் போன்றவளாய். உலகங்களைச் செயல் படுத்துகின்றவளாய். சிவன். திருமால். பிரமன். தேவர்கள் ஆகிய இவர்கட்கு கிட்டாத அருமை வாய்ந்தவளாயுள்ள உமாதேவியார் அருளிய முருகோனே.

ஆணவ. மயக்கமும் கல்வி. காமியம் அகற்றி எனை ஆள் உமை

(ஆலம்) நீரை. மலர் போன்ற கை விரல்களினின்றும், கங்கை முதலிய நதிகளாக விரித்த சாம்பவி. ஆதி இல்லாதவள், பிறந்த முடி இல்லாதவள் - ஆதியந்தம் இல்லாதவள். பிரமனுடைய தலை ஓடாகிய பாத்திரத்தைக் கொண்டவள், செம்பொன் போன்ற உயர்ந்த தன்மையை உடைய என்னுடைய ஆணவத்தையும். மயக்கத்தையும் தோண்டி வேரறுத்து ஆசைகளை அழித்து. என்னை ஆண்டருளிய உமை. பராசக்தி அழகி...

(100) <u>மருவு கடல்முகி</u> (இ.வ:— ; செ.653 ; ம.512)

திலத மதிமுக அழகி, மரகத
வடிவி பரிபுர நடனி, மலர்பத
சித்தர்க்குக், குறி வைத்திட்டத் தன
முத்தப் பொற்கிரி உத்தச் சித்திர

சிவை, கொள், திரு, சரசுவதி, வெகு வித
சொருபி முதுவிய கிழவி இயல்கொடு
செட்டிக்குச் சுகம் முற்றத் தத்துவ
சித்திற் சிற்பதம் வைத்தக் கற்பு உறு,
திரையில் அமுது என மொழி செய் கவுரி
யின் அரிய மகன் எனப் புகழ் புலிநகரில் ...

(101) <u>தத்தை மயில் போலு</u> (இ.வ:— செ:644 : ம:503)

சத்தி, சர சோதி திருமாது, வெகுரூபி, சுக
நித்திய கலியாணி என ஏண மலைமாது, சிவை
கற்பரனொடு ஆடும் அபிராமி சிவகாமி உமை அருள் பாலா

(102) <u>நீலக் குழலார்</u> (இ.வ:— : செ.648 : ம:507)

மாலைக்குழலாள், அற்புத வேதச் சொருபாள், அக்கினி
மார்பினிற் பிரகாசக் கிரி தன பார

வாசக் குயிலாள், நற் சிவ காமச் செயலாள் பத்தினி
மாணிக்கமினள் நிஷ்கள உமை

(35)

<u>செட்டிக்குத் தத்துவ சித்திற் சிற்பதம் வைத்தக் கற்புறு கவுரி.</u>

பொட்டணிந்ததும், சந்திரனுக்கு நிகரானதுமான முகத்தைக் கொண்ட அழகி, மரகதப் பச்சை நிறத்தை உடையவள், சிலம்பணிந்த நடனம் புரிபவள் (அடியார்களின் உள்ளத்தே) மலர்கின்ற திருவடியையுடைய, சித்த மூர்த்தியாகிய சிவ பெருமானுக்கு, அடையாளக் குறி வைத்திட்ட கொங்கைகள் - முத்து மாலைகள் அணிந்துள்ள பொன்மலை போன்ற தனங்களைக்கொண்டுள்ள அழகிய சிவாம்பிகை. (திரு) இலக்குமியையும், சரஸ்வதியையும் (கொள்) தனது (இரு கண்களாகக்) கொண்டு, பலவிதமான உருவத்தைக் கொண்டவள், (முதுவிய கிழவி) பழையவளினும் பழையவள், (இயல் கொடு) முறையாக வளையல் செட்டியாக வந்த சொக்கேசருக்கு, சுகம் (முற்ற) நிரம்ப, தத்துவ அறிவு முறையில் (சிற்பதம்) தனது ஞான பாதத்தைத் - திருவடியை - வைத்த கற்பு உள்ள கவுரி, (திரை) கடலிற் பிறந்த அமுது போன்ற இனிய சொற்களைப் பேசும் கவுரி - அத்தகைய தேவியின் அருமைப் புதல்வன் . . .

<u>சத்தி சரஜோதி. வெகுரூபி, சுக நித்திய கல்யாணி.</u>

பராசக்தி, அசைகின்ற ஜோதி, முத்தி நலம் அருள்பவள், பல உருவங்களை உடையவள், சுகத்தைத் தரும் நித்ய கல்யாணி என்ன ஏன்ற இமயமலை மகள், சிவை, இறைவனொடு நடனம் புரிகின்ற அபிராமி, சிவகாமி, உமை அருளிய பாலனே!

<u>அற்புத வேதச் சொருபாள், மாணிக்கமினள், நிஷ்கள உமை.</u>

மாலை அணிந்த கூந்தல் உடையவள், அற்புதமான வேதச் சொருபத்தை உடையவள், தனது அக்கினி உருவத்தில் மார்பில் ஒளி பொருந்திய மலை போன்ற கொங்கைப் பாரத்தைக்

கொண்ட குயில் போன்றவள், சிவபெருமானிடத்தே காமம் கொண்ட நல்ல செயலினளுமான பத்தினி, மாணிக்கம் போன்று மின்னொளி வீசுபவள், மாசற்றவள் ஆகிய உமை.

(103) **ஆசை நாலு சதுர** (கி.வ:495; செ:439: ம: 1313)

ஆரு பாதி உறை சத்தி, கவுரி குதலை
வாயின் மாது, துகிர் பச்சை வடிவச் சிவை என்
மாசு சேர் எழு பிறப்பையும் அறுத்த உமை
தந்த வாழ்வே

(104) **கொலவிதழ்** (கி.வ:—; செ:434: ம:1308)

கொலை புரி காளி, சூலி, வயிரவி, நீலி, மோடி
குலிச குடாரி ஆயி மகமாயி

குமரி, வராகி, மோகி, பகவதி, ஆதி, சோதி,
குணவதி, ஆல உணி, அபிராமி

பலி கொள் கபாலி, யோகி, பரம கல்யாணி, லோக
பதிவ்ரதை, வேத ஞானி புதல்வனே

(104 A) **ஆதி மகமாயி** (கி.வ:149, செ:393: ம: )

ஆதி மகமாயி, அம்பை, தேவி, சிவனார் மகிழ்ந்த
ஆ உடைய மாது



**என் மாசு சேர் எழு பிறப்பையும் அறுத்த உமை**

(சிவனுடைய) அழகிய இடது பாதியில் உறைகின்ற சத்தி. கௌரி. மழலைச் சொல் பேசும் மாது. பவள நிறமும் பச்சை நிறமும் கொண்ட வடிவினள், சிவை (மங்களம் பொருந்தியவர்) எனது குற்றம் நிறைந்த எழு பிறப்புகளையும் அறுத்த உமாதேவி ஈன்ற செல்வமே

**குமரி. வராகி. மோகி. பகவதி. ஆதி. சோதி, பரம கல்யாணி. வேத ஞானி**

(பகைவரைக்) கொலை செய்யும் காளி. சூலத்தை ஏந்தியவள், வயிரவி நீல நிறத்தினள், (மோடி) துர்க்கை— காடுகாள்— குலிசம், அங்குசம் ஏந்தியுள்ள ஆயி, மகமாயி.

குமரி, வராகி, மோகத்தைச் செய்பவள், பகவதி, முதன்மையானவள், ஜோதி மயமானவள், அருங்குணங்களை உடையவள், நஞ்சு உண்டவள், அழகி

பலி ஏற்கும் பிரம கபாலத்தையுடையவள், யோகம் செய்பவள், சிறந்த கல்யாணி, உலகம் போற்றும் பதிவிரதை, வேத ஞானி ஆகிய பார்வதியின் புதல்வனே.

ஆதி மகமாயி. அம்பிகை, தேவி சிவபெருமான் மகிழ்ந்த பசு ஏறும் பிராட்டி (அல்) ஆவுடையாள் என்ற பீடஸ்தானமாக விளங்குபவர் ஆகிய உமா தேவியார்

(105) சீர்பாத வகுப்பு (30,31) (37)

யுவதி, பவதி, பகவதி மதுர
வசனி, பயிரவி, கவுரி உமையாள் த்ரிசூலதரி

வநசை மதுபதி அமலை, விசையை, திரிபுரை, புநிதை
வநிதை அபிநவை, அநகை அபிராம நாயகி தன்
மதலை

(1106) தேவேந்திர சங்க வகுப்பு (1&12)

தரணியில் அரணிய, முரண், இரணியன்
உடல் தனை, நகநுதி கொடு
சாடு ஓங்கு நெடுங்கிரி) ஓடு ஏந்து பயங்கரி)

விசையை, திரிபுரை, புநிதை, வநிதை, அபிநவை, அநகை (37)

என்றும் இளமை உடையவள், (பவதி) தன்னிடமிருந்து எல்லாவற்றையும் உற்பத்தி செய்பவள், (பகவதி) திரு, செல்வம், புகழ், ஞானம், வீரம் வைராக்கியம் எனும் ஆறு குணங்களை உடையவள், தேன் போன்ற இனிய மொழியை உடையவள், காலத்தை அளக்கும் பைரவி, (கவுரி) விபூதி போன்ற வெண்ணிறம் உடையவள், (உமையாள்) பிரணவரூபம் கொண்டவள், முத்தலைச் சூலம் ஏந்தியவள்

தாமரையை ஆசனமாகக் கொண்டவள், (மதுபதி) காளி, (அமலை) மலமற்றவள், (விசையை) வெற்றி புனைந்தவள்- துர்க்கை, (திரிபுரை) மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் (அல்) கீழ், பூ, மேல் லோகத்தின் தலைவி, (புநிதை) தூய்மை மிக்கவள்- பரிசுத்த தேவதை. (வநிதை) அழகில் சிறந்தவள் (அல்) பெண்ணினல்லாள், (அபிநவை) என்றும் புதுமையாக இருப்பவள், (அநகை) பாபம் அற்றவள், (அபிராம நாயகி) அபரிதமான அழகியான தேவின் (மதலை) குமரன்

---

துதி. வர்ணனை, லீலைகள்

பூமியில், கோட்டைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்த, (முரண்) வலிமையைக் கொண்ட, இரணியாசுரனுடைய உடலை, நகங்களின் கூரிய நுனியைக் கொண்டு, (சாடு) எதிர்த்து அழித்து, பெரிய மலையன்ன உருவத்தைக் கொண்ட நரசிம்ம உருவத்தினள், வெண்டலை ஓடு- பிரம்ம கபாலத்தை கையில் ஏந்தின (பயங்கரி) அடியார்களின் அச்சத்தை நீக்குபவள், பகைவர்களுக்கு அச்சத்தைத் தருபவள்.

தமருகம் பரிபுரம் ஒலி கொடு நடம் நவில்
சரணிய, சதுர் மறை,
தாது அம்புய, மந்திர வேதாந்த பரம்பரை

சரிவளை, விரிசடை, எரிபுரை வடிவினள்
சததள முகுளித
தாம(ம்) அம் குசம், மென் திரு தாள், அந்தர அம்பிகை

சுரபதி சுரரொடு சமர் செய்த அசுரர்கள்
தடமணி முடி பொடி
தான் அம்படி செங்கையில் வாள் வாங்கிய சங்கரி

இரண கிரண மட மயில் மிருகமத புள
கித இளமுலை இள
நீர் தாங்கி துடங்கிய நூல் போன்ற மருங்கினள்



உடுக்கை, கால் சிலம்பு இவைகளின் ஒலியுடன், நடனத்தைச் செய்கின்ற (சரணிய) திருவடிகளை உடையவள், நான்கு வேதங்களினாலும் துதிக்கப்படுபவள். மகரந்தப் பொடி நிறைந்துள்ள தாமரை மலரைப் போன்ற திரு அடிகளை உடையவள், (மந்திர) பஞ்சாட்சர. ஷடாட்சர. முதலிய ஸ்ரீ வித்யா ரூபமாகத் திகழ்பவள். வேதங்களின் முடிவாக விளங்குபவள், (பரம்பரை) மேலான யாவர்க்கும் மேலானவள் - பராசக்தி

வளையல் கூட்டங்களை அணிந்தவள். சடை விரிந்த தவக்கோலம் கொண்டவள், மூண்டு எரியும் நெருப்புப் போன்ற வடிவம் கொண்டவள் நூறு இதழ்களைக் கொண்ட தாமரை அரும்பு விட்டது போன்ற (தாம) மாலைகளை பூண்டிருக்கும், அழகிய தனங்களை உடையவள், மென்மையான (திரு) லக்ஷ்மீகரம் பொருந்தியதுமான திருவடிகளை கொண்டவள், பராகாசத்தில் உள்ள (அம்பிகை) தேவி;

கற்பகத் தருவைக் கொண்ட நகரமாகிய அமராவதியில் வாழும் தேவர்களுடன், மாறுபட்டுப் போரிட்ட அரக்கர்களின். அகன்ற ரத்னங்கள் பதித்த கிரீடங்கள் பொடியாகும்படி, அழகிய கையில் வாளை ஏந்தி இருக்கும் சங்கரி

பொன் போன்ற ஒளியைக் கொண்ட மட (மடப்பமுடைய- Delicate) மயிலன்ன சாயலை உடையவள், கஸ்தூரி அணிந்துள்ளதும் - புளகாங்கிதம் கொண்டதுமான, இளமை வாய்ந்த கொங்கையாகிய இளநீர் (இளநீர் போன்ற கொங்கையின்) பாரத்தைத் தாங்குவதால் துவட்சியுற்றதாய், நூல் போல் மெலிந்ததான (மருங்கினள்) இடையை உடையவள்

இறுகிய திருபிறை எயிறு உடை யம படர்
எனது உயிர் கொள வரின்
யான் ஏங்குதல் கண்டு எதிர் தான் என்று கொளுங் குயில்

இடபம் கொடு திரி இரவலர் இடர் கெட
இடும் மன, கரதல
ஏகாம்பரை இந்திரை மோகாங்க சுமங்கலை

எழுதிய படமென இருள் அறு சுடர் அடி
இணை தொழும் மவுனிகள்
ஏகாந்த சுகம் தரு பாசம் அங்குச(ம்) சுந்தரி

கரணமும் மரணமும் மலமொடு உடல் படு
கடு வினை, கெட நினை,
கால அந்தரி கந்தரி நீலாஞ்சனி நஞ்சு உமிழ்

கனல் எரி, கண பண, குணமணி அணி பணி
கன வளை மரகத
காசாம்பர கஞ்சுளி தாக ஆம் படி கொண்டவள்

அழுத்தமாய் அமைந்துள்ள, சிறுபிறை போன்ற பற்களை உடைய யமதூதர்கள் என்னுடைய உயிரைக் கவர்ந்து செல்ல வந்தால் (அப்போது நான் வருந்துதலைக் கண்டு என் எதிரே வந்து என்னை ஆட்கொண்டருளும் குயில் போன்றவள்.

இடபம் பிச்சையை வாங்குவதற்காக, உலகத்தில் சுழலும் நலிந்தவர்கள் துன்பங்கள் அகலும்படி, (அவர்களுக்கு வேண்டியவற்றை அளிக்கும்) மனமும், திருக்கரத்தையும் உடைய ஏகாம்பரை (காஞ்சி ஏகாம்பரநாதரின் தேவியாகிய ஏலவார்குழலி) இந்திரை - மோட்ச லட்சுமி, கவர்ச்சியான அங்கங்களையுடைய சுமங்கலி

திரையில் தீட்டப்பட்ட ஓவியம் போல் கருவி கரணங்கள் அடங்கி, இருள் அகற்றி ஞான ஒளி வீசும் தன் திருவடிகள் இரண்டையும் தியானிக்கும் மவுன ஞானிகளுக்கு முடிவான பேரின்ப நிலையை அருளுகின்ற, பாசத்தையும், அங்குசத்தையும் கையில் ஏந்தியுள்ள திவ்ய அழகி

ஐந்து இந்திரியங்களின் செய்கைகள், இறப்பு, மும்மலங்கள், சரீரம் அநுபவிக்கும் கொடிய சஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமியம் என்ற வினைகள் - இவைகளெல்லாம் கெட்டு அழியும்படி (நினை) தன் மனத்தில் நினைத்து அவ்வாறே வரம் பாலிக்கும், யுகாந்த கால முடிவில் விளங்குபவள், (கந்தரி) அடியார்களின் இதய குகையில் வீற்றிருப்பவள், கறுப்பு நிறமுள்ள மையைப் பூசிக் கொள்பவள், விஷத்தை உமிழ்கின்ற

எரிகின்ற நெருப்பையும், கூட்டமான படங்களையும், உயர்ந்த ரத்னங்களையும் கொண்டதான (பணி) பாம்பையும், பெருமை மிக்க கையில் வளையலாக அணிந்திருப்பவள், பச்சை நிறத்தவள், காயாம்பு நிறமுள்ள (அம்பர) உடையும் சட்டையும் (தாக ஆம்படி) வஸ்திரமாக ஏற்றுக் கொண்டவள்.

கனகழல் நினையலர் உயிர் அவி பயிரவி
கவுரி கமலை குழை
காதார்ந்த செழும் கழுநீர் தோய்ந்த பெரும் திரு

கரை பொழி திருமுக கருணையில் உலகெழு
கடல், நிலை பெற, வளர்
காவு ஏந்திய பைங்கிளி மா சாம்பவி தந்தவன

(107) திருவேளைக்காரன் வகுப்பு (13)

யாமளை மணக்கு முக சாமளை மணிக் குயிலை
யாய் என அழைத்து உருகும் ... நேயக் காரனும்

(108) வேடிச்சி காவலன் வகுப்பு (1)

உதர கமலத்தினிடை முதிய புவனத்ரயமும்
உக முடிவில் வைக்கும் உமையாள் பெற்ற பாலகனும்

(109) கடைக்கணியல் வகுப்பு (15)

மலை இறை மடந்தை பெற்ற ஒரு மதலை



ஒலிக்கின்ற தனது கழலை நினையாதவர்களுடைய உயிரைப் போக்குகின்ற பயிரவி. பொன் நிறத்தவள், கமலாம்பிகை, குழையணிந்த காதில் (ஆர்ந்த) நிரம்பியுள்ள. செங்கழுநீர் மலரைக் கொண்ட (பெரும் திரு) பெருமை வாய்ந்த தேவி.

உள்ளம் கனிந்து வீசுகின்ற கருணை கடாட்சத்தால், ஏழு உலகங்களும், ஏழு சமுத்திரங்களும், நிலைத்திருக்கும்படி. (வளர்) பரிபாலனம் செய்யும், காத்தல் தொழிலை மேற்கொண்டுள்ள பசுமையான கிளி போன்றவள், மகா சாம்பவியான பார்வதி தேவி தந்து அருளியவனை

யாமளை. மணக்கு முக சாமளை

ச்யாமள நிறத்தை உடையவள், நறுமணம் இடம் கொண்டுள்ள பச்சை நிறத்தி, அழகிய குயில் போன்றவளாகிய பார்வதியை தாய் என்று அழைத்து விரும்பி மனம் நெகிழும் - . .

புவனத்ரயமும் யுக முடிவில் வைத்துக் காப்பாற்றும் உமையாள்

வயிறாகிய தாமரையிடத்தே பழமையாய் வரும் மூவுலகங்களையும், யுகம் முடிந்து பிரளயம் வரும் போது, அடக்கி வைத்துக் காப்பாற்றும் உமாதேவி பெற்ற பாலகன்

மலை இறை மடந்தை

மலைகளுக்கு அரசான இமயமலையின் மகள் பார்வதி பெற்ற ஒப்பற்ற குழந்தை

(110) பூதவேதாள வகுப்பு (166)

அருண கண பண புயக சுடிகையின்
அகிலபுவனமும் உதவு மலைமகள்,
அமல ஆரியை அந்தரி சுந்தரி
இமய மாமயில் அம்பை த்ரியம்பகி

அச்சுத சகோதரி. அனைத்து வேதத்தலைவி
அற்புத புராதனி. வர ப்ரகாச ப்ரக்ருதி

அம் பொற் குண்டலப் பேதை சாம்பவி
விம்பக் கிஞ்சுகப் பூவை பூங்கொடி

அக்ஷர லக்ஷ ஜபத்தர் க்ரமத்திரு
சக்ர தலத்தி த்ரியக்ஷி சடக்ஷரி
ஆயி: திருமைந்தன்



செந்நிறமுடையனவும், கூட்டமானவையுமான (பணம்) படங்களையுடைய (புயகம்) பாம்பாகிய ஆதி சேடனுடைய (சுடிகையில்) தலைகளின் உச்சியில் தாங்கப்பட்டுள்ள, சகல உலகங்களையும் ஈன்றருளிய பர்வத ராஜனது புத்திரி

மலம் அற்றவள், மேலானவள். பராகாச வடிவி. அழகி. இமய மலையில் வளர்ந்த அழகிய மயில் போன்றவள், அம்பிகை. மூன்று கண்களை உடையவள்,

திருமாலின் தங்கை. சகல வேதங்களிலும் முதன்மை ஞானத்தை உடையவள், அற்புதமான தன்மையளாம் பழையவள், வரமளிப்பதில் கீர்த்தி பெற்ற (ப்ரக்ருதி) தன்மையள். சுபாவத்தை உடையவள்.

அழகிய பொன்னாலாய குண்டலங்களை அணிந்த தேவி: சாம்பவி (சம்புவின் சக்தி): ஒளி வீசுகின்ற (கிஞ்சுகம்) கிளி (பூவை) நாகணவாய்ப்புள், அழகிய கொடி - இவை போன்றவள்

பஞ்சாக்ஷரம், சடாக்ஷரம் ஆகிய திருமந்திரங்களை. லக்ஷக்கணக்கில் ஜெபம் செய்கின்ற அடியார்கள் (க்ரமத்திரு) முறைப்படி அமைக்கின்ற (சக்ர) முக்கோணம், பஞ்சகோணம், ஷட்கோணம், நவகோணம், நாற்பத்து முக்கோணம் ஆகிய (தலத்தி) பீடங்களில் விளங்குபவள்; முக்கண்ணி. ஆறெழுத்தில் விளங்கும் சத்தி

அம்மை - ஆகிய பார்வதியின் அழகிய குமரன் -

(111) பொருகளத்தவகை வகுப்பு (1) 

அதிர்த்த பரிபுர பதத்தி பயிரவி
அமைத்த கரதலி ப்ரியத்தை உடையன

(112) போர்க்களத்தவகை வகுப்பு (2; 29)

பிணமலை, பவுரி வரும் பரிபுரம் நரல் பங்கய வித்தாரத் தன
பயிரவி பதங்கள் வாழ்த்தெடுத்த பசியன

நிமலை த்ரியம்பகி கவுரி திகம்பரி நிர்ப்பாவக குண
நிருமலி. இரங்கு தாய் ப்ரியத்தன் அறுமுகன்

(113) திருக்கையில் வழக்க வகுப்பு

சிவத்த கமலச் சரவணத்து அறுமுகப் பொருள்
செகத்ரயம் முகிழ்த்த உதரத் திரிபுரைக்கு ஒரு
திருப்புதல்வன்



பரிபுர பதத்தி. பயிரவி

ஒலி செய்யும், சிலம்பணிந்த பாதங்களை உடையவள்; பயிரவி. அஞ்சல் என்னும் குறிப்பைக் காட்டும்படி பொருந்திய திருக்கரத்தை உடையவள் - ஆகிய தேவியின் பிரியத்தைப் பெற்றவை - பொருகளத்து அலகைகள்.

த்ரியம்பகி. திகம்பரி. நிர்ப்பாவக் குண நிர்மலி

பிணமலைகளை. மண்டலமிட்டு வளைந்து கூத்தாடுவதான. (பரிபுரம்) சிலம்பு. (நரல்) ஒலிக்கின்ற (பங்கய) திருவடித் தாமரையையும் பரந்த தனங்களையும் கொண்ட (பயிரவி) துர்க்கையின் திருவடிகளை துதித்து நின்று பசி பசி என முறையிட்டன.
களங்கம் அற்றவள் - முக்கண்ணி. கவுரி. திக்குகளை அம்பரமாக - ஆடையாக உடையவள் - நிர்வாணி. (நிர்ப்பாவக் குணம்) பாவம் - பாவனைக்கு அதீதமான - எண்ணங்களுக்கு எட்டாத - எண்ணங்கள் அற்ற குணவிசேடத்தை உடைய (நிருமலி) குற்றமற்றவள் - ஆன்மாக்களிடத்தே கருணை நிறைந்த தாயாம் பார்வதிக்குப் பிரியமானவன் ...

செகத்ரயம் முகிழ்த்த உதரத் திரிபுரை

தாமரையில் சரவணப் பொய்கையில் ஆறுதிருமுகங்களோடு தோன்றிய கடவுள், மூன்று லோகங்களையும் ஈன்ற திருவயிற்றை உடைய பார்வதி தேவிக்கு ஒப்பற்ற ஒரு திருக்குமரன்.

(114) வேல் வாங்கு வகுப்பு (18-23) (43)

வாம அங்கனை
அருபவை, அம்பிகை அருதிதை அம்பை த்ரியம்பகி
ஆசாம்பரை, பாசாங்குசை

அநகை, அசஞ்சல், அதிகுண சுந்தரி, அந்தரி,
காலாந்தகி, மேலாந்திரு

அமலை, அலங்க்ருதை, அபிநய பங்கு உரை சங்கினி
மானங்கணி, ஞானங்குரை

அணி முக பந்திகள் சிறு பொறி சிந்த விளைந்தழல்
வாய் கான்றிடு நாகாங்கதை

அபய வரம் புரி உபய கரந்திகழ் அந்தணி
ஆமாங்கறி தாய் மாண்பினள்

அதுலை தரும் திரு மதலை
(அதுலை: ஒப்பற்றவள்)

(43)

அருபவை, அருதிதை, அம்பை, ஆசாம்பரை, அநகை, அசஞ்சல்

ஈசனின் இடது பாகத்தில் விளங்கும் (அங்கனை) பெண் - தேவி யாவற்றையும் நுகர வைப்பவள், (அம்பிகை) தேவி, (அருதிதை) சொல்ல இயலாதவள் - சொற்கு அடங்காதவள், (அம்பை) அம்பா - தாய், முக்கண்ணி, (ஆசை) திக்குகளை (அம்பரை) அம்பரமாக - ஆடையாக உடையவள், (நிர்வாணி), பாசமும் அங்குசமும் கையிற் கொண்டவள்.

பாவமற்றவள், சஞ்சலம் அற்றவள், மிகச் சிறந்த அழகி, (அந்தரி) ஞான வெளியில் இருப்பவள் - பராகாச வடிவை உடையவள், காலனுக்கு யமனையிருந்தவள், காலனை அட்டவள், (திருவின் மேலாம்) இலக்குமியின் மேலானவள்

மலம் நீங்கினவள், (அலங்க்ருதை) சிங்காரி, நடிப்பு, நாடக, இலக்கண (பங்கு) பாகங்களை எடுத்து உரைக்கும் (சங்கினி) பெண், (மான் அம் கண்ணி) மான் போலும் கண்ணை உடையவள், (ஞானங்குரை) ஞானத்துக்கு முளை - வித்து போன்றவள்

அழகிய முக வரிசைகள், படத்தின் வரிசைகள், சிறு பொறிகளைச் சிதறும்படி (விளைந்து) ஆகி, அழல் - நெருப்பை வாய்கள் கக்குகின்ற - வீசுகின்ற - (நாகம்) பாம்பை (அங்கதை) தோள் வளையாக அணிந்துள்ளவள்.

அபயம், வரதம் இவைகளைக் குறிக்கும் (உபய கரம்) இரண்டு கரங்கள் விளங்கும் (அந்தணி) செந்தண்மை பூண்டொழுகும் தேவி (ஆமாங்கறி) ஆம் அங்கு அறி - தனது அடியார்களுக்கு (ஆம்) வேண்டியவையை - அவர்கள் விரும்பியவையை, ஆங்கு - அப்பொழுதே (அறி) அறிந்து உதவும் தாய் போன்ற (மாண்பினை) பெருமையை - மாட்சியை உடையவள்.

(115) சிவலோக வகுப்பு (1.2)

பஞ்சாட்சரர் பங்கின் கொடி தாளினில்
உலகும், மலைகளும், உததியும், உயிரும் அடங்கி
ஒடுங்கும் பார்ப்பதி மைந்தன்

(116) சித்து வகுப்பு (73)

மிடை தரும் ப்ரவாள சடை பெரும் ப்ரவாத
விமலர், கொன்றை மாலை, தருண சந்த்ர ரேகை
விரவு மணநாறு பாதார விந்த
விதான விநோத மாதாவின் மைந்தன்

(117) சிவங்காள கண்டர் : வேல் விருத்தம் -2

கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னி, நாரணி, த்ரிபுரை, பயிரவி, அமலை
கௌரி, காமாக்ஷி, சைவ

சிங்காரி, யாமளை, பவானி, கார்த்திகை கொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச் சிறுவன்



தாளினில், சகலமும் அடங்கி ஒடுங்கும் பார்ப்பதி 

ஐந்தெழுத்துக்கு உரியவரான சிவபெருமானது இடதுபாகத்தில்
விளங்கும் கொடி போன்ற பார்வதி தேவி- தனது திருவடியில்
உலகங்களும், மலைகளும், கடலும், சகல உயிர் வர்க்கங்களும்,
(அடங்க) எல்லாம் கடையூழியில் ஒடுங்கி நிற்கின்ற பார்வதி
தேவியின் குமாரன்

ஈசன் தலையில் உள்ள கொன்றை, பிறை மணநாறு பாதார விந்தம்

நெருக்கமுள்ளதும் பவளம் போலச் சிவந்ததுமான சடையில் பெரு
வெள்ளமாக கங்கை தங்கும் பரிசுத்த மூர்த்தியின் கொன்றை
மாலையும், இளமை வாய்ந்த பிறைக்கீற்றும்
கலந்து மணம் வீசும் பாத அரவிந்தத்தை- திருவடித் தாமரைகளை
உடையவரும், கொடையழகை, கருணை அழகைக் கொண்டவரும்
ஆகிய பார்வதி தேவியின் மைந்தன்

கங்காளி, சாமுண்டி, வாராகி, இந்த்ராணி, கௌமாரி

எலும்பு மாலையை அணிந்தவள், துர்க்கை, வராகவதாரத்தின் சக்தி,
(சப்தமாதர்களில்) இந்திர சக்தி, குமாரமூர்த்தியின் சக்தி, தாமரையை
ஆசனமாகக் கொண்டுள்ள கன்னிப் பருவம் அழியாதவள், காத்தல்
தொழிலை நடத்தும் சக்தி, என்றும் இளையவள், மும்மூர்த்திகளுக்கும்
மூத்தவள், பயிரவி, மலமற்றவள், கௌரி, காமாக்ஷி, சிவத்தில் பற்றுடைய
அழகி, சியாமள நிறத்தை உடையவள், பவானி, கார்த்திகை (துர்க்கை)
வெற்றிக்கு உரிய துர்க்கை, முக்கண்ணி அளித்த - .

(118) சக்ரப் ரசண்ட (மயில் விருத்தம்: 2)

பக்கத்தில் ஒன்று படு பச்சைப் பசுங் கவுரி
பத்மப் பதம் கமழ் தரும்
பாகீரதிச் சடில யோகீசுரர்

